# AYURVEDA

## The Arshaic System of Hindu Medicine

OFFICE OF THE REGISTRAR
24 JUL 1911
MADRAS

Ayurveda Marthanda Bhishangmani

**Pandit D. Gopalacharlu, A. V. S.**

LB
N11
85792

# AYURVEDA

## The Arshaic System of Hindu Medicine

*AN ESSAY*

BY


**Ayurveda Marthanda, Bhishangmani**

**Pandit D. Gopalacharlu, A.V.S.,**

*Principal, S.K.P.D. Ayurvedic College, and Senior Physician,*
*S. K. P. D. Hospital, Madras:*
*Examiner, Mysore Government Ayurveda Vidwad Examinations:*
*Commentator on Susruta, Madhavanidana, Pathyapathya, Arkaprakasika, &c;*
*and Gold Medalist in the Various Industrial and*
*Agricultural Exhibitions in India.*



OFFICE OF ... 24 ... 1911 MADRAS.



MADRAS:
**THE AYURVEDIC PRINTING WORKS**
*55, Achārappan Street.*



[Registered Copy-right.]



1911. Price As. 4.

1088
U5.(1)

35792

# ஆயுர்வேதம்.

எனும் ஆர்ஷவைத்திய முறையைப்பற்றிய நிரூபம்.

---

சென்னை எஸ். கே. பி. டி. ஆயுர்வேதகாலேஜ் ப்ரின்ஸிபாலும்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரி பிரதான வைத்தியரும்,
மைசூர் ஸம்ஸ்த்தானத்து ஆயுர்வேதபரீக்ஷகரும்,
பாரததேசமெங்கும் தேசியமஹாஸபைகளைச் சார்ந்து நிறைவேறிய
பல கண்காட்சிச்சாலைகளில் அனேக தங்கமெடல்களைப்
பரிசாகப்பெற்றவரும்,
ஸுச்ருதமாதவநிதாந பத்யாபத்யங்களுக்கு உரைவரைந்தவருமான
ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

**பண்டித டி. கோபாலாசாரியர், எ. வி. எஸ்.**

அவர்கள் இயற்றியது.

---

சென்னை
ஆயுர்வேதமுத்திராக்ஷரசாலை
55, ஆசாரப்பன் தெரு.

---

[ரிஜிஸ்டர்ட்-காபீரைட்] ௧௯௧௧. [விலை அணா ௪.



பண்டித டி. கோபாலாசாரியர், எ. வி. எஸ்.

# PREFATORY NOTE.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1911
MADRAS.

In the following pages is printed a Tamil rendering of an article I contributed to the New Year (1910) number of *Andhra Patrika* of Bombay. In it, I have sought to prove that the Ayurvedic system of Hindu Medicine is as old as the Vedas. Our ancient Rishis considered it absolutely necessary for every Hindu to attend to the preservation of health in order to prolong life as this is essential to the due performance of Dharmas or duties enjoined by Shastras— சரீரமாத்யம் கலு தர்மஸாதநம். Following in the wake of the Rishis who wrote valuable treatises on all the various departments of medical Science, eminent physicians of old have left us a mine of medical literature. In this article I have shown the comprehensiveness of the Science as propounded by our ancients and the high esteem in which this system of treatment was held by our forefathers. I have drawn special attention to the fact that Surgery was not unknown to the Hindu physicians of old. Well known treatises—Susruta and others—describe delicate operations, the instruments to perform them and various sterelizing processes for preparing the instruments before use. I sincerely hope that some eminent doctor conversant both with the Western and Eastern systems of Medicine would make a thorough study of these ancient modes of Surgical treatment and do all that is necessary to modernise the Ayurvedic Surgery in order to save it from unmerited oblivion and obloquy to which it has till now been consigned.

*Madras,*
*1st July, 1911.*

**Pandit D. GOPALACHARLU.**

# முகவுரை.

பம்பாய் இராஜதானியிற் பிரசுரமாகும் "ஆந்த்ர பத்திரிகை" எனும் பிரஸித்தமான பத்திரிகைக்கு ஆயுர்வேத சிகித்ஸாசாஸ்திரத்தின் சிறப்பைக் குறித்து கடந்த 1910ம் வருடத்துப் புதுவருட முதற்சஞ்சிகையில் என்னால் தெலுங்கிற் பிரசுரிக்கப்பெற்ற விஷயம் இவ்வாறு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. "சரீரமாத்யம் கலு தர்மஸாதநம்" என்றவாறு வடமொழியில் முதுமொழியொன்றுளது. தர்மங்களனைத்தையும் அனுட்டிக்க இவ்வுடலே முதற்கருவியாதலின், இதைப்பரிவுடன் பரிபாலிப்பது மிகவும் இன்றியமையாப் பணியாம். ஆதலாற்றான் வேதநூல்களிலும் இவ்வாயுர்வேத வித்யை விசாரிக்கப்பெற்றுளது. மேன்மைதங்கிய மாமுனிவர்களும் இதைச் சிறப்பிக்க வடமொழியிற் பல வைத்தியநூல்கள் இயற்றினர். அல்லாமலும், புகழ்பெற்ற வைத்தியர் அநேகர் புதிய வைத்தியநூல்கள் இயற்றியும், முற்காலத்திய முனிவர் வரைந்த சிறந்த வைத்தியகிரந்தங்களுக்கு உயர்ந்த உரைகள் வரைந்தும் இவ்வாயுர்வேத சாஸ்திரத்தை உலகிற் பரவச்செய்தனர். இங்ஙனம் புலவரெனப் புகழ்பெற்ற வைத்தியவரர்களால் இயற்றப்பெற்ற நூல்கள், இக்காலத்தில் அச்சியந்திரங்களின் மஹிமையினால் அகில ஜனங்களது கரங்களையும் அலங்கரிக்கக் கூடியவைகளாயுள்ளன. இந்நூல்களில் விவஹரிக்கப்படும் விஷயங்களை விளக்கி, ஆயுர்வேத சிகித்ஸையின் சிறப்பையெடுத்துக் காட்டி, இதனாலுண்டாகும் பயனைப் பெறுமாறு ஜனங்களுக்கு உத்ஸாஹமூட்டும்பொருட்டு இந்நிரூபத்தை யெழுதப் புகுந்தேன். இதன் உபயோகத்தை யுவப்புடன் ஏற்ற எனது நண்பரிற் பலரது கொள்கையை அனுஸரித்து, அந்நிரூபத்தைத் தெலுங்கு தமிழ் முதலிய பாஷைகளில் இவ்வண்ணம் புத்தகரூபமாகப் பிரசுரப்படுத்த முயன்றேன். நமது பண்டைக் காலத்தவர் சஸ்திரசிகித்ஸைகளில் அறிவுள்ளவராயிருந்தனரோவென ஐயமுறுபவரின் அடாத சங்கையை அகற்றும் பொருட்டு, ஆயுர்வேத சஸ்திர சிகித்ஸையின் மேன்மையைக் குறித்து விரிவாக விசாரித்திருக்கின்றேன். இந்நிரூபத்தைப் படிக்கும் பண்டிதர் அகண்டமான ஆயுர்வேதவித்யையை மேலோங்கச் செய்து, பிணிகளாற் பீடிக்கப்படுபவரான மானிடரது நன்றிக்குப் பாத்திரராகுகவென, ஆரோக்கியமளிக்க வல்லவனான ஸ்ரீமந்நாராயணனைப் பணிவுடன் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை :
ஆயுர்வேதாச்ரமம்.

பண்டித டி. கோபாலாசார்யுலு.

ஸ்ரீ:.

# ஆயுர்வேதம்.

ஆயுர்வேதமென்றால் என்ன? அஃதெப்பொழுதுற்பத்தியாயிற்று? அதிலுள்ள விஷயவிசேஷங்களெவை? அதனுபயோகங்கள் எத்தகையன? இது முதலிய விஷயங்களனைத்தையும் விஸ்தாரமாயறியவேண்டுவது மிகவும் அவசியமாயிருப்பினும், இந்நூல் மிக விரிவடையுமென்றஞ்சி, சிலவற்றை மாத்திரம் சுருக்கமாயெழுதுகின்றோம்.

## ஆயுர்வேத சப்தத்தின் விற்பத்தி.

ஆயு:, வேத: என்கிற இரண்டு பதங்களின் சேர்க்கையினாலுண்டான ‘ஆயுர்வேத:’ என்னும் பதத்திற்கு “ஆயு: அநேந விந்ததி வேத்தி வா ஆயுர்வேத:” என்கிற விற்பத்தியினால் ஆயுஸ்ஸை (என்றால்— “சரீரேந்த்ரிய ஸத்வாத்ம ஸம்யோகோ தாரி ஜீவிதம் - நித்யகச்சாநுபந்தச்ச ஸம்யோகாதாயு ருச்யதே” என்கிற பிரமாணத்தையநுஸரித்து, சரீர, இந்த்ரிய, ஸத்வ, ஆத்மா என்னும் இவைகள் ஒருமிக்கச் சேர்ந்திருப்பதே ஆயுஸ்.) அடைவது, அல்லது அறிந்து கொள்வதே ‘ஆயுர்வேதம்’ என்று தெரியவருகிறது.

## ஆயுர்வேதம் பண்டைக் காலத்தது.

“ருக்வேதஸ்யாயுர்வேத உபவேத:” என்கிற வியாஸமுனிவரது சரணவ்யூஹ வாக்கியத்தினால் அநாதிகாலந்தொட்டு பரமாத்மாவின் திருமுகமண்டலத்திலிருந்து வெளிவந்ததெனவும், பற்பல தேசத்துச் சரித்திரகாரர்களால் முதன் முதலியற்றிய நூலெனவும் கூறப்படும் ருக்வேத, யஜுர்வேத, ஸாமவேத, அதர்வவேதங்களென்னும் நான்கு வேதங்களுள் முதன்முதலான ருக்வேதத்திற்கு ஆயுர்வேதம் உபவேதமென்று அறியப்படுகிறது.

அநாதியான ருக்வேதத்திற்கு உபவேதமாயிருப்பதாலும், ருக்வேத அதர்வேதாதிகளுள் "ஸுமித்ரியா ந ஆப ஓஷதயஸ் ஸந்து" அ-6. ம-22. என்று யஜுர்வேதத்திலும்; "த்ரிர் நோ அச்விநா திவ்யாநி பேஷஜா" என்று 1-3-4. ருக்வேதத்திலும், "ஸர்வமாயுரேதி ய ஏவம் வித்வாநுஷ்ணி ஹோரா குருதே" என்று 1 - 5. ஐத்ரேய ப்ராஹ்மணத்திலும் வைத்திய ப்ரதிபாதகங்களான ச்ருதிகள் அநேகம் காணப்படுகின்றமையாலும், இவ்வாயுர்வேதமும் வெகு பண்டைக்காலத்ததென ஊஹிக்கவேண்டியிருக்கின்றது.

ஆயுர்வேதம் உபவேதம் என்று நிச்சயித்தல்.

முதன்முதல் மஹர்ஷிகள் பரலோகஸுகங்களை யளிக்கவல்ல ச்ருதிகளனைத்தையும் ருக் யஜுஸ் ஸாமாதர்வங்களென்னும் ஸம்ஹிதைகளாக வகுத்தபின்பு, இவ்வுலகத்திய ஸுகங்களை யெல்லாம் அறிவிப்பதிற் சிறந்தவையான மிகுந்த ச்ருதிகளில் சிகித்ஸை முதலிய ஆரோக்ய பாகங்களுக்கு அநுகூலமான ச்ருதி ஸமுதாயங்களை 'ஆயுர்வேதம்' என்றும், ஸங்கீதத்திற்கு ஸம்பந்தமான ச்ருதிகளை 'காந்தர்வவேதம்' என்றும், அஸ்திர சஸ்திரங்களைச் சேர்ந்தவையான ச்ருதிஸமூஹங்களை 'தனுர்வேதம்' என்றும், சிற்பத்தைச் சார்ந்த ச்ருதிகளை 'ஸ்தாபத்யவேதம்' என்றும் ஏற்படுத்தியதாகப் புலப்படுகின்றது. இங்ஙனம் நான்கு வேதங்களுக்குப் பிறகு வெவ்வேறாக வகுக்கப்பட்ட ஆயுர்வேதம், காந்தர்வவேதம், தநுர்வேதம், ஸ்தாபத்யவேதம் என்னும் இந்நான்குக்கும் 'உபவேதங்கள்' என்றும், இவற்றிற்குப் பின்பட்டவையான ஜ்யௌதிஷம் முதலியதற்கு வேதாங்கங்களென்றும் பெயர்களை முற்காலத்திய முனிவர் வழங்கிவந்ததாகத் தெரியவருகின்றது. அங்ஙனம் இல்லையேல் ருக்வேதம் முதலியவைகளில் வைத்திய ப்ரதிபாதகங்களான ச்ருதிகள் இராமலிருந்திருக்கக்கூடும்.

ருக்வேதம் முதலியவைகளைப்போல் அவ்வாறு ச்ருதிமயமாக ஆயுர்வேதமானது ஆநுபூர்வியாக அகப்படாமற் போகிலும், ருக்வேதம் முதலானவற்றிற் சிகித்ஸையை யறிவிக்கும் ச்ருதிகள் வெகுவாய்க் காணப்படுவதால், ஆயுர்வேதமும் ச்ருதிமயமாகவே இருக்கக்கூடுமென யோசிக்கவேண்டியிருக்கின்றது.



ஆயுர்வேதம் தொன்றுதொட்டு உபதேசிக்கப்பட்டு வந்தது.

அத்தகைய ச்ருதிமயமான ஆயுர்வேதத்தை பரமாத்மா நான்முகனுக்கும், நான்முகன் தக்ஷபிரஜாபதிக்கும், தக்ஷர் அச்விநீதேவதைகளுக்கும், அச்விநீதேவதைகள் இந்திரனுக்கும், இந்திரன் ஆத்திரேயருக்கும், ஆத்திரேயர் அக்னிவேசருக்கும், அக்னிவேசர் பேடஜாதுகர்ண தன்வந்தரி சரக ஸுச்ருதர் முதலானவர்களுக்கும் தொன்றுதொட்டு உபதேசித்து வந்ததாகத் தெரியவருகின்றது.

இவ்வாயுர்வேதம் ச்ருதிஸ்வரூபமானதாலும், (ஆகையினாற்றானே) ஜனங்களனைவரும் அறிந்துகொள்வதரிதாகுமானதாலும், சஸ்திரசிகித்ஸை, காயசிகித்ஸை, இரஸாயநசிகித்ஸை முதலிய சிகித்ஸைகளெல்லாம் ஒன்றோடொன்று கலந்திருப்பதுபற்றியும், நான்முகன், அறியவரிதான பொருள்களை யடைந்த, ச்ருதியுருவங்கொண்ட இவ்வாயுர்வேதத்தை தனித்தனியாக் சஸ்திரசிகித்ஸை, காயசிகித்ஸை, பாலசிகித்ஸை, நேத்திர ச்ரோத்திராதி சிகித்ஸை முதலியவைகளைச் செய்யும் விஷயத்தில் வைத்தியருக்கு மிகவும் ஸௌகரிய மேற்படும் விதமாகவும், எல்லாஜனங்களும் அறிவதற்கு அநுகூலமாயிருக்கும் வண்ணமும்

1. சல்யதந்திரம் — Science of Surgery.
2. சாலாக்யதந்திரம் — Science of Eye, Nose, Throat &c. Diseases.
3. காயசிகித்ஸை — General Treatment.
4. பூதவித்யை — Demoniacal Diseases.
5. கௌமாரப்ருத்யம் — Management of Children.
6. அகததந்திரம் — Taxicology.
7. இரஸாயநதந்திரம் — Science of Reguvoration.
8. வாஜீகரணதந்திரம் — Science of Aphrodisiacs.

என்று எட்டுவிதமாகப் பகுத்து, இலக்ஷ ச்லோகங்களடங்கிய ஆயிரம் அத்தியாயங்களாய் ஏற்படுத்திய 'ப்ரஹ்மஸம்ஹிதை' என்னும் கிரந்தத்தை பிரசுரப்படுத்தியதாக ஸுச்ருதம் முதலிய நூல்களால் தெரியவருகின்றதாகிலும், அவ்வாநுபூர்வியான கிரந்தம் மாத்திரம் இங்கெங்கும் காணப்படுகின்றதில்லை.

## சல்யதந்திரம் முதலியவைகளின் விவரம்.

1. சல்யதந்திரமென்றால்:— பலவகையான புற்பூண்டுகள், கொம்புகள், கற்கள், மணல், இரும்பு முதலிய உலோகங்கள், ஓடுகள், எலும்புகள், மயிர்கள், நகங்கள் முதலானவை உடலினுள் அனேக காரணங்களால் பிரவேசித்து, பலவிதமாக உண்டுபண்ணும் உபத்திரவங்களையும், விஹ்மாஸ்யம், கங்கமுகம் முதலிய சஸ்திரங்களாலும், க்ஷாரம், அக்னி முதலான வேறு உபாயங்களாலும் உபத்திரவங்களை நிவிருத்தி செய்யுவதற்கேற்ற சிகித்ஸைகளையும் கூறும் பாகம்.

2. சாலாக்யமென்றால்:— கழுத்துக்கு மேலிருக்கும் மூக்கு, முகம், கண்கள், காதுகள் முதலியவைகளில் உண்டாகும் பிணிகளையும், அவைகளை விலக்குவதற்கேற்ற சிகித்ஸைகளையும் தெரியப்படுத்தும் பாகம்.

3. காயசிகித்ஸை யென்றால்:— அங்கங்களனைத்திலும் உண்டாகும் ஜ்வரம், அதிஸாரம், இரக்தபித்தம், க்ஷயம் முதலிய வியாதிகளையும் சிகித்ஸைகளையும் விவரிக்கும் பாகம்.

4. பூதவித்யை யென்றால்:—தேவர், அஸுரர், கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர், பித்ருக்கள், பிசாசங்கள், நாகங்கள், கிரஹங்கள் முதலியவற்றால் பற்றிக்கொண்டு பீடிக்கப்பட்டவர்களுடைய பீடைகளையும் சிகித்ஸைகளையும் கூறும் பாகம்.

5. கௌமாரப்ருத்ய மென்றால்:— பாலர்களின் ஸம்ரக்ஷணை, தாய்ப்பாலின் குணதோஷங்களின் விபாகம், பாலர்களுக்குப் பாலால் வரக்கூடிய பிணிகள் முதலியவற்றையும் அவைகளின் சிகித்ஸைகளையு முரைக்கும் பாகம்.

6. அகததந்திரமென்றால்:—பாம்பு, தேள், எலி முதலியவைகளின் விஷம், வத்ஸநாபி, வெள்ளைப்பாஷாணம் கந்தமூலபத்திர தாதுவிஷங்கள், இவ்விஷங்களால் உண்டாக்கப்படும் தோஷங்களின்வகைகள் முதலானவைகளைத் தெரிந்துக் கொள்ளுவதற்கேற்ற உபாயங்களையும், அந்தந்த தோஷங்களை நீக்கும் வழிகளையும், தனித்தனிப் பதார்த்தங்களை யொன்றோடொன்று கலப்பதால் உண்டாகும் விஷதோஷாதிகளையும் அறிவிக்கும்பாகம்.



7. இரஸாயனதந்திரமென்றால்:— முதிர்வைப் போக்கி, ஆயுளையும், புத்தியையும், பலத்தையும் செழிக்கச் செய்து, பிணிகளனைத்தையும் விலக்கக்கூடிய ஔஷதங்களை விவரிக்கும் பாகம்.

8. வாஜீகரணதந்திர மென்றால்:—அற்பமாகவும், தோஷங்களால் கெட்டு அல்லது க்ஷயத்தை யடைந்திருக்கும் சுக்கிரத்தைத் தெளியவும் செழிக்கவும் செய்து, அப்பிணியாளரை திருப்திசெய்வதற்கேற்ற முறைகளைக் கூறும்பாகம்.

இவ்வாறு எட்டுவிதமாய் வகுக்கப்பட்ட வைத்திய சாஸ்திரத்தில் சிகித்ஸைக்கு எவ்வெவ்வகையான ஸாதனங்களின் அங்கங்கள் இன்றியமையாதவையோ, அவையனைத்தும் குறைவின்றி மேற்படி எண்வகையான தந்திரங்களாக எற்பாடு செய்து இதர வைத்திய சாஸ்திரகாரர்களின் உதவியை எதிர்பாராமலே பல கிரந்தங்கள் முற்காலத்து முனிவர்களால் தொன்றுதொட்டு இயற்றப் பெற்றன.

மேற்கூறிய எட்டுவிதமான சிகித்ஸாசாஸ்திரங்களின் தொகுதியில் அனேக நூல்கள் காணப்படுகின்றனவாகிலும், வைதிககாலத்தில் ஆரியர்களுக்கிருந்த அறிவின் அருமையை யறிவிக்கும் ச்ருதிகள் பலவிருப்பினும், சஸ்திரசிகித்ஸை, காயசிகித்ஸை முதலியவைகளை போதிக்கும் ச்ருதிகளிற் சிலவற்றை மாத்திரம் இங்கு உதஹரிக்கின்றனம்:—

## சல்யதந்திரத்தைப் போதிக்கும் ச்ருதிகள்.

'யஜ்ஞஸ்ய சிரோச்சித்யத தே தேவா அச்விநாவப்ருவன் பிஷஜௌ வை ஸ்த்த இதம் யஜ்ஞஸ்ய சிர: ப்ரதி தத்தமிதி ............ ததோ வை யஜ்ஞஸ்ய சிர: ப்ரத்யதத்தாம்' (யஜுஸ். 6-4-9.) யஜ்ஞ புருஷனுடைய தலை யறுக்கப்பட்டபொழுது தேவதைகள் தேவ வைத்தியரென்று பெரும்புகழ்பெற்ற அச்விநீதேவதைகளை 'யஜ்ஞ புருஷனது சிரஸ்ஸை மீளவும் ஒன்று சேர்க்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டதனால், அவர்கள் சஸ்திர சிகித்ஸையில் தமக்கிருக்கும் திறமையினால் யஜ்ஞபுருஷனுடைய சிரஸ்ஸை யொன்று சேர்த்து உஜ்ஜீவிக்கச்செய்தனர்; அல்லாமலும், "ஸத்யோ ஜங்காம் ஆயஸீம் விஸ்பலாயை" ருக்-1. அ-3. ஸூ-186-116-5. விஸ்பலை

யென்னும் ஸ்த்ரீக்குக் கால்முறிந்துபோக, இரும்பினலாக்கிய காலை நடுநிசிநேரத்திலேயே அச்வினீதேவதைகள் ஒன்று சேர்த்து அனுகூலப் படுத்தினர்கள்; மேலும், ருக்வேதம் முதலஷ்டகத்தில்—"தஸ்மா அக்ஷி நாஸத்யா விசக்ஷ ஆதத்தமதஸ்ரா பிஷஜாதர்வா" அங்ஙனமே மற்றொருஸமயந்திற் கண்ணிழந்தவருக்கு வேறொன்றினுடையதான கண்ணைஎடுத்துவந்து பொருந்தச்செய்து அச்வினீதேவதைகள் சிகித்ஸை பண்ணினர்கள்; இவ்வாறு சிரஸ்ஸந்தானம், அக்ஷிஸந்தானம் இவைகளைக் கூறும் ச்ருதிகளால் அறியப்படும் விஷயங்களினல் சாலாக்யதந்திரத்தில் சஸ்திரசிகித்ஸையின் திறமை தெரிவிக்கப்படுகின்றது. அன்றியும் ஜங்காஸந்தானத்தை (ஒடிந்தகாலை யிணைத்தலை) போதிக்கும் ச்ருதியினல் சல்யதந்திரமனைத்திலும் சஸ்திரசிகித்ஸையின் தேர்ச்சி யறிவிக்கப்படுகின்றது.

## இரஸாயன தந்திரபோதக ச்ருதி.

"யுவம் ச்யவானமச்வினு ஜரந்தம் புனர்யுவானம் சக்ரதுச் சசீபி:" (ருக்-1-8-5) முதிர்ச்சித்தன்மையை யனுபவித்த ச்யவனமுனிவர், அச்வினீதேவதைகளின் வைத்தியத்திறமையினல் மீண்டும் வாலிபப் பருவத்தைப் பெற்றதாகத் தெரியவருகின்றதாதலின் இரஸாயனதந்திரம் மிகவும் கொண்டாடக் கூடியதாகின்றது.

## காயசிகித்ஸையைப் போதிக்கும் ச்ருதிகள்.

"நக்தம் ஜாதாஸ்யோஷதே" (அதர்வ. 1-5-23) இரவிற்பிறந்த மஞ்சள், கரசாங்கணி, தும்மட்டி, நீலி என்னும் ஒஷதிகாள்! நீங்கள் எனது சரீரத்திலுள்ள கிலாஸம் (வெண்குஷ்டம்), பலிதம் (தலைநரைத்தல்) இவைகளைப்போக்கி மீளவும் இயற்கையான ரூபத்தை யுண்டுபண்ணுவீர்களாக. "த்ரிர்நோ அச்விநா திவ்யாநி பேஷஜா" "த்ரிதாதுச்சர்ம வஹதம் சுபஸ்பதீ"(ருக்வே-1-34-6) ஓ அச்வினீதேவதைகாள்! சுபகரமான ஒஷதிகளுக்கு அதிபதிகளான நீங்கள் தேவலோக பூலோகங்களிலுண்டான ஒஷதிகளை மும்முறை எமக்கு அளித்தருள்வீராக; அந்த மூன்றுவகையான ஒஷதிகளால் வாத, பித்த, ச்லேஷ்மங்களென்னும் மூன்றுதாதுக்களையும் ஸுகப்படுத்துவீர்கள். பிருஹஸ்பதி புத்திரனை உசம்யு என்பவனுக்கிருக்கும் ஸௌக்கியத்தை எனது குமாரனுக்கும் உண்டுபண்ணுவீர்களாக.



"வாதீ ஆவாது பேஷஜம் சம்புமயோ புவோ ஹ்ருதே ப்ரண ஆயூம்ஷி தாரிஷத்" (ருக். 8-8-44) வாயுபகவான் பிணிகளைப் போக்குபவையும், இருதயத்திற்கு ஸுகந்தரக் கூடியவையுமான ஔஷதத்தைக் கொடுப்பானுக. அதனல் எமக்கு அளவற்ற ஆயுளை அளித்தருள்வானுக.

இங்ஙனம் வெண்குஷ்டத்தைப் போக்குபவையும், வாதபித்த ச்லேஷ்மங்களென்னும் மூன்று தோஷங்களை சமனப்படுத்துபவையும், இருதயத்திற்கு ஸுகங்கொடுக்கக் கூடியவையுமான சிகித்ஸா விசேஷங்கள் காயசிகித்ஸையிலிருக்கும் கௌரவத்தைக் கூறுகின்றன.

இவ்வாறு வைதிக காலத்தில் ருக்வேதம் முதலியவை சஸ்திர சிகித்ஸை, காயசிகித்ஸை, ஊர்த்வாங்க சிகித்ஸை முதலானவற்றைப் போதிப்பிக்கின்ற ஆர்யவைத்திய நூல்களின் அபிவிருத்தியைக் கூறுகின்றனவாதலால், ஆர்யர் சஸ்திர சிகித்ஸை, காயசிகித்ஸை, கண் செவி முதலியவற்றின் சிகித்ஸைகளில் தேர்ச்சியடைந்திருந்தனரென எவர்தான் சொல்லத் துணியார்?

இப்படி வைதிக காலத்திலேயே மிக்க செழித்தோங்கிய இவ்வாயுர்வேத சிகித்ஸைகள் இருஷி பாம்பரையாக அபிவிருத்தியானதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டு உலகெங்கும் புகழ்பெற்ற சரக ஸுச்ருத வாக்படாதி நூல்களிலிருக்கும் ரோக நிவர்த்தகங்களான ஒஷதிகள், அவற்றுல் செய்யப்படும் ஔஷதங்கள் இவற்றின் விஷயங்களில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே ஆர்யர்கள் மிகவும் மேலான திறமை வாய்ந்தவராகவும், ஔஷதங்களால் பிணிகளைப் போக்குவதில் மிக்க நிபுணர்களாகவும் இருந்தனரென்பது பெரும்பான்மையோரால் நன்குணரப் பெற்ற பிரஸித்தமான விஷயமே.

மேலும் ஸர் விலியம் ஹண்டர் என்று மிகப் பெயர்பெற்ற ஆங்கில சரித்திரகாரர் "இந்தியதேசத்தவர் ஆயுர்வேத ஔஷ

தங்களிலும், ஔஷதி தத்துவ நிரூபணங்களிலும் வெகு காலங்களுக்கு முன்னமே புகழ்பெற்றவர்" எனவும், பின்னர் "ஹிந்துக்களின் பதார்த் தத்துவ சாஸ்திரங்களையும், நாம் அவற்றால் அடைந்த உபகாரங்களையும் நோக்குங்கால், ச்வாஸ உப்பஸரோகத்திற்குக் கருத்த ஊமத்தையிலையின் புகையை உறிஞ்சுவது, பார்ச்வ வாயு அஜீர்ணரோகங்களுக்கு எட்டிகொட்டையை உபயோகிப்பது முதலிய ஹிந்துக்களின் பழையகாலத்துச் சிகித்ஸைகளை ஐரோபா கண்டத்து வைத்யசாஸ்திரஞ்ஞர்கள் புதிதாய்க்கைப்பற்றினரென்னும் செய்தியை நமது நினைவுக்குக் கொண்டுவருவோமாயின், அவரது சிகித்ஸைகளில் அனேகம் சிறந்த குணங்களுளவென்று தெளிவாகத் தெரியவருகின்றது." என்று லண்டன் நகரத்தில் கிங்ஸ் காலேஜில் இருக்கும் ப்ரொபஸர் ஜே. எப். ராயல், எம். டி. எப். ஆர். அண்ட் எல்.எஸ். என்னும் ஔஷதிதத்துவசாஸ்திர பண்டிதர் பகர்ந்திருக்கின்றனர்.

இவ்வண்ணம் மேல்தேசத்து வைத்திய நிபுணர்கள் காயசிகித்ஸைகளைக் குறித்துக் கூறிக்கொண்டிருக்கின்றமையால், ஆர்யர்கள் ஔஷதங்களைக் கொண்டு சிகித்ஸைகள் செய்வதில் மிக்க திறமை வாய்ந்தவரென்பது வெகு பண்டைக்காலத்து விஷயமானதினால், அக்காய சிகித்ஸையைப்பற்றிய பிரஸ்தாவத்தை இத்துடன் விட்டு, அக்காலத்தில் அவர்களுக்கு சஸ்திர சிகித்ஸையிலேற்பட்டிருந்த திறமையின் சிறப்பு மறக்கப்பட்டு வருகின்றதாதலால், இப்பொழுது மறைந்துபோன அந்த சஸ்திர சிகித்ஸையை மாத்திரம் வெளிப்படக் கூறவேண்டுமென்னும் எண்ணத்துடன் சஸ்திர சிகித்ஸைக்கு அவசியமாய் ஸம்பந்தித்த யந்திரங்கள், சஸ்திரங்கள், க்ஷாரங்கள் முதலியவை, அவற்றின் பேதங்கள், அவைகளது உபயோகங்கள் முதலானவைகளை சுருக்கமாய் இங்கு வரைகின்றனம்.

சஸ்திர சிகித்ஸை எண்வகை.

1. சேத்யம் — அறுக்கத் தகுந்தது — Incising.
2. பேத்யம் — இரண்டாக பிளக்கத் தகுந்தது — Excising.
3. லேக்யம் — கீறத் தகுந்தது — Scraping.
4. வேத்யம் — குத்தத் தகுந்தது — Puncturing.



5. ஏஷ்யம் — ஊடுருவத் தகுந்தது — Probing.
6. ஆஹார்யம் — வெளியில் இழுக்கத் தகுந்தது — Extracting.
7. விஸ்ராவ்யம் — பெருகச்செய்யத் தகுந்தது — Secreting fluids.
8. ஸீவ்யம் — தைக்கத் தகுந்தது — Suturing.

என்று சஸ்திரம் முதலியவற்றால் செய்யக்கூடிய கிருத்யங்கள் எட்டு விதமாக ஸுச்ருத ஸ. அக்ரோபஹரணீயாத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள.

இயந்திரங்கள்.

"யந்த்ரசத மேகோத்தரம்" (ஸுச்ருத ஸ. அ. 7.) என்னும் வாக்கியத்தினால் இயந்திரங்கள் நூற்றொன்று என ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அனேக காரணங்களால் சர்மம், மாம்ஸம், எலும்பு இவற்றினுள் பொத்து, சரீரத்தையும் மனதையும் விசேஷமாய் உபத்திரவிக்கும் சல்யங்களை (என்றால் இரும்புமுளை, முள், எலும்பு, சயரவை முதலியவற்றை) வெளிப்படுத்துவதற்குக் கருவியாயிருப்பவை இயந்திரங்கள் எனப்படும். அவற்றுள்

1. ஸ்வஸ்திகயந்திரங்கள் 24 — Forceps.
2. ஸந்தம்சயந்திரங்கள் 2 — Tongs.
3. தாளயந்திரங்கள் 2 — Hook-like Instruments.
4. நாடீயந்திரங்கள் 20 — Tubular (Syringes, enemas &c.)
5. சலாகாயந்திரங்கள் 28 — Bougies.
6. உபயந்திரங்கள் 25 — Minor Surgical accessories (thread, dressing cloth, lint &c.)

இவ்வாறு நூற்றோர் இயந்திரங்கள் ஆறுவிதங்களாக அந்தந்த சிகித்ஸைகளின் ஸௌகரியத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள.

அல்லாமலும் "தானி ப்ராயசோ லௌஹானி பவந்தி; தத்ப்ரதிப்ரதிரூபகாணி வா தத்லாபே" "வ்யாளாநாம் ம்ருகபக்ஷிணாம் முகைர்முகானி யந்த்ராணாம் ப்ராயசஸ் ஸத்ருசானி, தஸ்மாத் ஸாமாந்யாதாகமாத் உபதேசாத் அந்யயந்த்ரதர்சநாத் யுக்திதச்ச காரயேத்' அவ்வியந்திரங்கள் பொதுவாய் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கும்

விதமாகவாவது, தொன்றுதொட்டு வந்த உபதேசரீதியாக வாகி லும். வேறு இயந்திரங்களின் மாதிரியைப் பார்த்தாயினும், அல்லது தமது யுக்திக்கேற்றவண்ணமேனும் ஸர்ப்பங்கள், விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் முகங்களுக்கேற்ற உருவங்களையுடையவைகளாய், இரும்பு முதலிய உலோகங்களால், அல்லது (உலோகம் கிடைக்காமற் போகில்) அவற்றிற்குப் பதிலாக வேறு தந்தம், கொம்பு முதலியவைகளால் செய்யவேண்டும். மேலும் "ஸமாஹிதானி யந்த்ராணி கரசலக்ஷணமுகானி ச - ஸுத்ருடானி ஸுரூபாணி ஸுக்ரஹாணி ச காரயேத்" என்னும் ச்லோகத்தினால் வழுவுண்டு வன்மை பொருந்திய கருக்குடன் கூடிய முனையையுடையவையும், உரத்தவையும், பார்ப்பதற்கு அழகானவையும், நன்கு பிடிப்பதற்கு அனுகூலமானவையுமாக இயந்திரங்களை நிர்மிக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது.

### ஸ்வஸ்திகயந்திரம் முதலியவற்றின் அளவுகள்.

"ஸ்வஸ்திகானி அஷ்டாதசாங்குல ப்ரமாணானி, ஸிம்ஹவ்யாக்ர ........தரக்ஷுமுகானி. மஸூராக்ருதிபி: கீலைரவபத்தானி, மூலேங்குசவதாவ்ருத்தவாராங்காணி அஸ்த்திவிநஷ்ட சல்யோத்தரணார்த்தம் உபதிச்யந்தே"— ஸ்வஸ்திகயந்திரங்கள் பதினெட்டு அங்குலம் நீண்டும், சிங்கம், புலி, சிறுத்தை முதலியவற்றின் முகங்களுக்கேற்ற முகங்களுடையவையும், சிறுகட்டைப் பருப்பளவுகொண்ட கீல்களால் இணைக்கப்பட்டும், முகம் அங்குசம் (மரவட்டி) போல் வளைந்தும் இருக்கவேண்டும்.

இப்படி இவ்வியந்திரங்கள் எலும்புகளில் பொத்துக்கொள்ளும் இரும்புமுளை முதலிய சல்யங்களை வெளியிலெடுப்பதற்காக உதவுகின்றதாய்த் தெரியவருகின்றது. ஸ்வஸ்திகாதி யந்திரங்களைப் போலவே ஸந்தம்சயந்திரங்களும் ஆறு அங்குலம் நீண்டும், மாம்ஸம், ஸிரைகள், நரம்புகள், முதலியவற்றில் மாட்டிக்கொண்டிருக்கும் சல்யங்களை இழுப்பதற்குபயோகிக்கப் படுகின்றனவெனக் கூறப்படுகிறது.

நாடியந்திரங்கள் அனேக விதங்களாகவும், ஒருமுகம் அல்லது இருமுகங்களுடன் கூடியவைகளாகவும், ஸ்ரோதோமார்க்கங்களில் நுழையக்கூடிய பருமனுள்ளவைகளாகவும், ஸ்ரோதஸ்ஸுகளில் பொத்திருக்கும் சல்யங்களை யிழுப்பது ஸ்ரோதோரோகங்களைப் பரீக்ஷிப்பது முதலிய அந்தந்த காரியங்களுக்கு அனுகூலமான நீட்டமுள்ளவைகளாகவும் இருக்கவேண்டு மெனவும் அறியப் படுகின்றது.



தாளயந்திரங்கள் பன்னிரண்டு அங்குலம் நீண்டவைகளாகவும், மீன்களின் முள்ளுபோல் முனைகளை யுடையவைகளாகவும் செய்யப்பட்டு, காது மூக்குகளிலுள்ள சல்யங்களை வெளியிலெடுப்பதில் உபயோகமாவதாய்ப் புலப்படுகின்றது.

சலாகை முதலிய இயந்திரங்களுடையவும், உபயந்திரங்களான கயிறுகள், தந்திகள், தோல்கள், நார்கள், வஸ்திரங்கள், க்ஷாரங்கள் முதலியவைகளுடையவும் அளவு முதலானவைகள் விவரமாய்க் கூறப்பெற்றுள.

மேலும் "ஸ்வபுத்த்யா சாபி விபஜேத் யந்த்ரகர்மாணி புத்திமாந், அஸங்க்யேயவிகல்பத்வாத் சல்யாநாமிதி நிச்சய:" என்கிற பிரமாணத்தை அநுஸரித்து, சல்யங்கள் சரீரத்தினுள் எண்ணிறந்தவகைகளிற் பிரவேசித்திருக்குமாதலால், அனுபவசாலியும் மதியூகியுமான வைத்தியன் ஸமயோசிதமாய் அதற்கேற்றவண்ணம் யந்திரகர்மங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதால், யந்திரங்களாலுண்டாகும் தோஷங்கள் நேரிடாதவகைகளும், யந்திரமுறை மிகவும் எளிதாகச் செய்யக்கூடிய விதமும், அவ்வேலையின் திறன்மையும் நன்கு குறிக்கப்பட்டிருக்கின்றன.

### சஸ்திரங்கள் இருபது விதங்கள்.

| | |
|---|---|
| 1. மண்டலாக்ரம்<br>2. கரபத்ரம் | Knife, Saw for incising and Scraping. |
| 3. வ்ருத்திபத்ரம்<br>4. நகசஸ்த்ரம்<br>5. உத்பலபத்ரம்<br>6. அர்த்ததாரம்<br>7. முத்ரிகா | Razor, Nail Clipper, Lancet &c., for incising & excising. |

| | |
|---|---|
| ஸூசி A. | Needle, trocar, scissors, &c. for Exudating and Secreting. |
| 8. த்ரிகூர்சகம் | |
| 9. குசபத்ரம் | |
| 10. ஆடீமுகம் | |
| 11. சராரீமுகம் | |
| 12. அந்தர்முகம் | |
| 13. குடாரிகா | Axe, awl, knife, needle &c for Puncturing. |
| 14. ஆரம் | |
| 15. வேதஸபத்ரம் | |
| 16. வ்ரீஹிமுகம் | |
| ஸூசி B. | |
| 17. படிசம் | Hook or angle; dental pincers; for extracting solid bodies. |
| 18. தந்தசங்கு | |
| 19. எஷணீ | Probe or director for Probing. |
| 20. ஸூசி | Needle for Suturing. |

இவ்வாறு ஸுச்ருத ஸூ. 8-வது அத்தியாயத்தில் மண்டலாக்ரம் முதலிய சஸ்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

### சஸ்திர ஸ்வரூபங்கள்.

மேலும் வாக்படத்தில் அந்த சஸ்திரங்களை "ஷட்விம்சதிஸ் ஸுகர்மாரைர்க்கடிதாநி யதாவிதி - சஸ்த்ராணி ரோமவாஹீநி பாஹுல்யேநாங்குலாநி ஷட் - ஸுரூபாணி ஸுதாரணி ஸுக்ரஹாணி ச காரயேத் - அகராளாநி ஸுத்மாத ஸுதீக்ஷ்ணைர் திதேயவி - ஸமாஹிதமுகாக்ராணி நீலாம் போஜச்சவீநி ச - நாமாநுகதரூபாணி ஸதா ஸந்நிஹிதாநி ச - ஸ்வமாநார்த்த சதுர்த்தாம்ச பலாந்யேகைக சோபி ச - ப்ராயோ த்வித்ராணி யுஞ்ஜீத தாநி ஸ்த்தாநவிசேஷத:" என்னும் பிரமாணப்படி சஸ்திரங்கள் இருபத்தாறு விதங்களெனவும், அவை சாஸ்திரத்திற் கூறப்பட்டவாறு நன்கு காய்ச்சிய நல்ல உருக்கிரும்பைக்கொண்டு சிறப்புற்ற பணியாளரால் செய்யப்பட்டவைகளா யிருக்கவேண்டுமெனவும், அவை உருவத்தில் மிக மனோஹரமாகவும் நல்ல கருக்கு அமைந்தவையாகவும் மயிர்களைச் சேதிக்கும் விதமாகவும் நல்லப் பிடிகளை யுடையவையாகவும் வளையாமல் நன்கு முகம் முதலியவைகளுடன் கூடியனவாயும் கருநெய்தல் போல் மினிமினிப்புள்ளவை யாகவும் இருக்கவேண்டு மெனவும்,



அவற்றின் ப்ரமாணங்களில் பாதி அல்லது நான்கிலொன்று அகலமுள்ள கருக்குடன்கூடி அவ்வவற்றின் பெயர்களுக்கேற்ற உருவங்களை யுடையவையாகவும் நான்கு அங்குலம் நீளத்துடன் கூடியவையாகவும் ஒவ்வொருவகையிலும் இரண்டு மூன்று உருக்கள் அவசியமாக இருக்கவேண்டுமெனவும் தெரியவருகின்றது.

இவ்வாறு சஸ்திரங்களின் ரீதியும், உருவமும், அளவு முதலியவைகளும் விவரமாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

### கருக்கின் ஸ்வரூபமும் அளவும்.

"தத்ர தாரா பேதநாநாம் மாஸூரீ, லேகநாநாம் அர்த்தமாஸூரீ, வ்யதநாநாம் விஸ்ராவணாநாம் ச கைசிகீ. சேதநாநாம் அர்த்த கைசிகீ" என்று பேதநகர்மத்தில் உபயோகிக்கப்படும் சஸ்திரங்களின் மெல்லிய முனையானது சிறுகடலைப்பருப்பின் அளவுகொண்டதும், லேகநகர்மத்தில் உபயோகிக்கப்படும் சஸ்திரங்களின் மெல்லிய முனையானது சிறுகடலைப்பருப்பின் பாதியளவு இருக்கவேண்டுமெனவும், குத்துவதற்கும், பெருக்கவதற்கும் ஏற்றதான சஸ்திரங்களின்முனை மயிரிழைபோலிருக்க வேண்டுமென்வும், அறுப்பதற்கு அனுகூலமான சஸ்திரங்களின்முனை மயிரிழையிலும் பாதியளவு உள்ளதாயிருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டுளது.

### பாயனஸம்ஸ்காரம்.

பாயனமென்றால், (Tempering and Sterilisation) பா-பாநே என்னும் தாதுவைக்கொண்டு(இயல்பு) அறியப்படும் அர்த்தத்தினால், சஸ்திரங்களை நெருப்பில் காய்ச்சி, க்ஷாரம், திராவகம், தைலம், தண்ணீர் இவைகளில் இடுவது, அல்லது க்ஷாரம், திராவகம், தைலம், தண்ணீர் இவைகளில் சஸ்திரத்தைப்போட்டு நன்கு காய்ச்சுவது எனத்தெரியவருகின்றது. பேதநம் முதலிய வேலைகளைச்செய்யும்போது அவ்வவ்வவயவ பிரதேசங்களையும், மாம்ஸாதி தாதுக்களையு மனுஸரித்து, வெவ்வேறுவகையான சஸ்திரங்களை யுபயோகிக்கவேண்டும். அவ்வாறுபயோகிக்கும்பொழுது சஸ்திரங்களுக்கு 'பாயநம்' என்னும் ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டுமெனவும், அப்பாயநஸம்ஸ்காரத்தினால் சஸ்திரங்களுக்குக் கருக்கு முதலிய

குணங்களேயன்றி கர்மங்களிலும் விசேஷமானசிறப்பும் உண்டாகு மென்றுரைக்கப் பெற்றுளது.

“தேஷாம் பாயநா த்ரிவிதா க்ஷாரோதக தைலேஷு - தத்ர க்ஷாரபாயிதம் சரசல்யாஸ்த்திச் சேதநேஷு - உதகபாயிதம் மாம்ஸச்சேதநபேதந பாடநேஷு-தைலபாயிதம் ஸிராவ்யதந ஸ்நாயுச் சேதநேஷு”—க்ஷாரபாயனத்தினுல் பாணங்கள் சல்யங்கள் எலும்புகள் இவைகளை யறுக்கும் வேலையில் ஸௌகரியமெனவும், உதக (ஜலம்) பாயனத்தினுல் மாம்ஸத்தை யறுப்பதிலும் பிளப்பதிலும் ஸௌகரியமெனவும், தைலபாயனத்தினுல் ஸிரைகளையும் ஸ்நாயுக்களையும் அறுப்பதில் அநுகூலமாயிருக்கு மெனவும், சஸ்திரங்களுக்குப் பாயனத்தை மூன்றுவிதமாய் வகுத்திருக்கின்றனர்.

இப்படி பாயனஸம்ஸ்காரம் செய்வதால் சஸ்திரங்களிலிருக்கும் தோஷங்கள் ஒழிவதேயல்லாமல், வேலைகளில் ஸௌகரியமும், இக்காலத்தில் சஸ்திரசிகித்ஸை செய்யும்பொழுது கிரிமிஜாலங்களை நசிப்பிப்பதற்கென்று பண்ணப்படும் வேலையும் குறிக்கப் படுவதாகத் தோற்றுகிறது.

### இருபதுவகையான சஸ்திரங்களை அந்தந்த வேளைகளில் ஏற்றவகையில் உபயோகித்தல்.

மண்டலாக்ர கரபத்ரங்கள் சேதந லேகந வேலைகளிலும், வ்ருத்திபத்ர நகசஸ்த்ர முத்ரிக உத்பலபத்ர அர்த்ததாரைகள் சேதந பேதநகர்மங்களிலும், ஸூசி குசபத்ர ஆடீமுக சராரீமுக அந்தர்முக த்ரிகூர்ச்சங்கள் ஸ்ராவிக்கச் (பெருக்குவது) செய்யும்வேலைகளிலும், குடாரிகா வ்ரீஹிமுக ஆர வேதஸபத்ரங்கள் வ்யதந (குத்தும்) வேலையிலும், படிச தந்தசங்குக்கள் ஆஹரண (வெளியில் இழுக்கும்) வேலையிலும், ஏஷணிகள் ஏஷணி யென்னும் துளாவும் வேலையிலும், ஸூசிகள் குத்தும் வேலையிலும் உபயோகிக்கப்படு மென்று அறியப்படுகிறது.

இங்ஙனம் சஸ்திரங்களின் உருவமும், வேலைகளின் ஸௌகரியமும், அவற்றின் உபயோகமும் விஸ்தாரமாய் வர்ணிக்கப்பட்டுள்ளன.



LB N11

### சஸ்திரகர்மங்களிலிருக்கும் திறமை-ஸுச்ருத சிகித்ஸா.

“பத்தகுதே பரிஸ்ராவிணி ச ஸ்நிக்தஸ்விந்நஸ்ய அப்யக்தஸ்ய அதோநாபேர் வாமதச் சதுரங்குலமபஹாய ரோமராஜ்யா உதரம் பாடயித்வா சதுரங்குலப்ரமாணாநி அந்த்ராணி விநிஷ்க்ருத்ய நிரீக்ஷ்ய பத்தகுதஸ்ய அந்த்ரப்ரதிரோதகரம் அச்மாநம் வாலம் வா அபோஹ்ய மலஜாதம்வா ததோ மதுஸர்பிர்ப்யாம் அப்யஜ்ய அந்த்ராணி யதாஸ்த்தாநம் ஸ்த்தாபயித்வா பாஹ்யம் வ்ரணமுதரஸ்ய ஸீவ்யேத்” பத்தகுத (Intestinal Obstruction), பரிஸ்ராவி (Intestinal perforation) யென்னும் உதர ரோகங்களில் ஸ்நேஹ - ஸ்வேத- அப்யஞ்ஜந கர்மங்களைச் செய்த பின்பு, ரோகியின் தொப்புளுக்குக் கீழ் உரோமராஜிக்கு இடது புறமாய் நாலங்குலம் விட்டு மேல் வயிற்றைக்கிழித்து (Opening of the abdomen) உள்ளிருக்கும் குடலில் நாலு அங்குல அளவு வெளிப்படுத்தி (Pulling out only 4 inches of the intestines) அக்குடலில் தடைபட்டிருக்கும் கற்கள் அல்லது மயிர்கள் அல்லது வேறு மலங்களை வெளியில் எடுத்து ஏறிந்து பிறகு சஸ்திரகர்மவிதிபிரகாரம் அலம்புவது முதலிய சுத்திசெய்யும் வேலைகளைச்செய்து, விரணங்களைப் போக்கக்கூடிய தேன், நெய் இவைகளால் குடலை நன்றாய்ப் பூசி, முதலில் எடுக்கப்பட்ட அந்தக் குடல்களை அவைகளிருக்கவேண்டிய விடத்திலேயே மீளவும் அமைத்து, புண்ணுடன்கூடிய [illegible] பட்ட வயிற்று சர்மத்தை ஸூசி யென்னும் சஸ்[illegible]த்தினுல் தைத்து விடவேண்டும்.

85792

அதே ரீதியாய் பரிஸ்ராவி யென்னும் உதர ரோகத்திலுங் கூட “சல்யமுத்த்ருத்ய அந்த்ரஸ்ராவாந் ஸம்சோத்ய தச்சித்ராந்த்ரம் ஸமாதாய காலபிபீலிகாபிர் தம்சயேத்; [illegible] ச தாஸாம் காயாநபஹரேத், ந சிராம்ஸி, தத:பூர்வவத்ஸீவ்யேத்; ஸந்தாநஞ் ச யதோக்தம் காரயேத்”. மேற்கூறியவாறு குடலை வெளியில் [illegible] தெடுத்து, ஆஹார முதலியவற்றுடன் கலந்து உள்ளே [illegible] கும் கற்கள் நகங்கள் முதலிய சல்யங்களை வெளிப்படுத்தி, [illegible] விழுந்து ஒழுக்குண்டாயிருக்கும் குடலை நன்கு சுத்தமாக்கி, த்வாரத்துடன் கூடிய அக்குடலை அதிருக்கவேண்டிய விடத்தில் வைத்து, குடலிலிருக்கும் த்வாரத்தைக் கடித்து மூடிக்கொண்டி

ருப்பதற்காக, கட்டெறும்புகளைக் கொண்டுவந்து த்வாரந்தோறும் ஒவ்வோர் எறும்பைக் கடித்துக் கொள்ளச்செய்து, அவை கடித்துக்கொண்டவுடன் அவற்றின் தலைகளைத் தவிர்த்து மற்ற அவயவங்களை யெடுத்தெறிந்து விடவேண்டும். பிறகு பத்தகுதம் என்னும் ரோகத்திற் சொல்லியவாறு வயிற்றைத் தைத்து விடவேண்டும்.

## முறைகேடான பிரஸவத்தில் சஸ்திர சிகித்ஸை.

## (Operations in preter-natural labours.)

வாக்பட - சாரீர. அத். 2:— "ஹஸ்தபாத சிரோபிர்யோ யோநிம் புக்ந: ப்ரபத்யதே, பாதேந யோநிமேகேந புக்நோந்யேந குதம் ச ய:. விஷ்கம்பௌ நாம தௌ மூடௌ சஸ்திரதாரண மர்ஹத:. மண்டலாங்குலி சஸ்த்ராப்யாம் தத்ர கர்ம ப்ரசஸ்யதே, வ்ருத்திபத்ரம் ஹி தீக்ஷ்ணாக்ரம் ந யோநாவவசாரயேத்" கருப்பையினுள் சிசுவின் கைகால்கள் தலை முதலியவை வெவ்வேறு காலத்தில் மர்மஸ்தானமுகத்தை யடைவதால், அல்லது ஒருகால்மட்டும் துவாரத்தினூடே வெளிவருவதால் "விஷ்கம்பம்" என்னும் மூடகர்ப்பமென்கிற பெயரைப் பெற்று, பிறகு சஸ்திரசிகித்ஸைக்குத் தகுந்ததாய் ஆகின்றதெனவும், அவ்வகையான சஸ்திர சிகித்ஸையை வெகு கூர்மையான வ்ருத்திபத்ரம், தீக்ஷ்ணாக்ரம் என்னும் ஆயுதங்களால் செய்யாது மண்டலாக்ரம் என்கிற சஸ்திரத்தினால் சிகித்ஸை செய்யவேண்டுமெனக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் 'பூர்வம் சிர:கபாலாநி தாரயித்வா விசோதயேத், கக்ஷோரஸ்தாலுசிபுககப்ரதேசேந்யதமே தத:. ஸமாலம்ப்யத்ருடம் கர்ஷேத் குசலோ கர்ப்பசங்குநா, அபிந்நசிரஸம் த்வக்ஷிகூடயோர்கண்டயோரபி'—முதலில் சிசுவின் கபாலத்தையும் பிளந்து வெளிப்படுத்திச் சுத்தமாக்கவேண்டும். பின்பு திறமைசாலியான வைத்தியன் அக்குள், மார்பு, முகவாய்க்கட்டை முதலியவற்றுள் ஏதையேனும் கர்ப்பசங்குவென்னும் யந்திரத்தினால் திடமாய்ப் பன்றிக்கொண்டு வெளியில் இழுக்கவேண்டும்.

மண்டையைக் கிழிக்கும்போது சிசுவின் கண்குவளையில் கர்ப்பசங்குவை நுழைத்து அச்சிசுவை வெளிப்படுத்துக. அன்



றியும் "பாஹும் சித்வாம்ஸஸக்தஸ்ய வாதாத்மாதோதரஸ்ய ச, விதார்ய கோஷ்டமந்த்ராணி பஹிர் வா ஸந்நிரஸ்ய ச, கடீஸக்தஸ்ய தத்வச் ச தத்கபாலாநி தாரயேத்" சிசுவின் தோள்கள் தடைபட்டு, வாயுவினால் வயிறுப்பி யிருக்குமாகில், கைகளையறுத்து, வயிற்றையும் குடல்களையும் கிழித்து, சிசுவை வெளிப்படுத்தவேண்டும். சிசுவின் இடையானது தடை யுண்டுபண்ணுமானால் இடுப்பெலும்புகளைப் பிளந்து முன்போல் வெளிக்குக்கொண்டுவருக:— என்று தெரியவருவதுடன், 'யத்யத் வாயுவசாதங்கம் ஸஜ்ஜேத் கர்ப்பஸ்ய கண்டச:. தத்தத் சித்வா ஹரேத் ஸம்யக் ரக்ஷேந் நாரீஞ்ச யத்நத:' முறைகேடான பிரஸவங்களில் வாயுவினால் சிசுவின் எவ்வெவ்விடம் வெளிப்படும் வழிக்குத் தடையை யுண்டுபண்ணுகிறதோ, அந்தந்த பாகத்தைச் சிறுசிறு துண்டாக அறுத்து வெளிப்படுத்தி, பெருமுயற்சியுடன் ஸ்த்ரீயைக் காப்பாற்றவேண்டுமெனவும் அறியப்படுகின்றது.

சஸ்திர சிகித்ஸைகளுக்கேற்ற யந்திரங்கள், சஸ்திரங்கள், க்ஷாரங்கள் முதலியவற்றை விவரமாய்க் கூறுவதாலும், அவ்வவற்றின் உருவம், மாறுபாடு முதலியவைகளை நிரூபணம் செய்வதாலும் சஸ்திரசிகித்ஸைக்கு இன்றியமையாதவைகளான கருவிகள் அனைத்தையும் சஸ்திரசிகித்ஸை செய்வதற்கு முன்னமே சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டுமென ஸுச்ருத-ஸூத்திர-8-வது அத்தியாயம் அறிவிக்கின்றதாதலால், இக்காலத்தியவரைப் போலவே பொருள்கள் எல்லாவற்றையும் ஒருமிக்கச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டுவதாகத் தெரியவருகின்றது. அவ்வாறு ஸம்பாதிக்கப்பெற்ற யந்திர சஸ்திராதி ஸாமக்ரிகளை அந்தந்த பிணிகளின் பேதங்களைக்கொண்டு அந்தந்த சஸ்திரங்களையும் யந்திரங்களையும் உபயோகிக்க வேண்டுமென்கிற விதிகளை நோக்குங்கால் அவரவரது ஸம்பூர்ணமான அனுபவம், அறிவு இவைகளின் ஸஹாயத்தால் இவை யேற்படுத்தப்பட்டனவென ஊஹிக்க வேண்டியிருக்கின்றது.

மேலும் மேற்படி உதாரணங்களாகக் காணப்படும் உதரரோக சஸ்திர சிகித்ஸையையும், முறைதப்பான பிரஸவங்களிலேற்பட்ட சஸ்திரவேலைகளையும் விசாரித்துப் பார்ப்போமாகில், இக்காலத்

துப் பொருமை யொழிந்த திறமைபொருந்திய சஸ்திர சிகித்ஸகரால் கொண்டாடக் கூடியவைகளா யிருக்கின்றன வல்லாது, கேவலம் பரிஹாஸத்திற்குப் பாத்திரமானவைகளாய்ப் பார்க்கப்படவில்லை. அல்லாமலும் அந்த சஸ்திர சிகித்ஸையிலுங்கூட,

1. மேஹரணங்கள் — Carbuncles,
2. அச்மரீ — Stone in the bladder.
3. அர்சஸ் — Piles.
4. அந்தர்வித்ரதி — Abcess in the liver, intestines, heart &c.
5. கண்வியாதிகள் — Eye diseases.
6. தொண்டை ரோகங்கள் — Throat diseases.

முதலியவற்றில் அவர்களுக்கு சஸ்திர சிகித்ஸையிலுள்ள திறமையை நோக்குங்கால், கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இவ்வளவு யந்திர சஸ்திரம் முதலிய கருவிகளுடன், சிகித்ஸையின் ஸௌகரியத்தின் பொருட்டு அந்த யந்திர சஸ்திர ஸாமக்ரிகளில் பற்பல வகைகளையும் ஏற்படுத்தி, அதற்கேற்ப சஸ்திரவேலைகளும் எட்டுவிதங்களென நிர்ணயம் செய்து சஸ்திர சிகித்ஸையைச் செய்யும் உலகத்தோருக்கு உதவி செய்தது, இக்காலத்தவருக்கு மிகவும் ஆச்சரியத்தை யுண்டாக்குமென்பதில் ஐயமேது மிலது.

இலை தழைகளைக்கொண்டு மானத்தைக் காப்பாற்றிக்கொண்டனரென, சரித்திரக்காரர் கூறுகிற அவ்வகையான அநாகரிகமான காலத்திலேயே நமது ஆர்யர் சஸ்திர சிகித்ஸைகளில் இக்காலத்திய சஸ்திர சிகித்ஸையைப் பார்க்கினும் மேலான நிலைமையில் இருந்ததாக மேற்படி வாக்கியங்களால் அறியப்படுகின்றது.

மேலும் சஸ்திர யந்திராதி ஸாதனங்களோடும், சஸ்திர சிகித்ஸை செய்வதில் திறமையோடும் கூடியிருக்கும் ஆயுர்வேத சஸ்திர சிகித்ஸைகளே லோபமடையாமல், கிரமமாகத் தொன்று தொட்டு லக்ஷ்யலக்ஷணங்கள் தவறாது, இந்நாளளவும் அநுஸரிக்கப்பட்டு வந்திருக்குமாகில், அவை எவ்வளவு மேன்மையான நிலைமையில் இருக்கக்கூடுமோ கூறுவதற்கில்லை.



அல்லாமலும் ஸுச்ருத-ஸூத்திர ஸ்தானத்தில் 17. 18. 20. 21. 22. 23. 24. 25 26. 27. அத்தியாயங்களையும், சரகத்தில், சிகித்ஸா ஸ்தானத்தில் 13-வது அத்தியாயத்தையும், வாக்பட-ஸூத்திர-26. 27. 28 29. 30. அத்தியாயங்களையும் ஒரு முறையேனும் படித்துப் பார்த்த மனிதன், ஆர்யருக்கு சஸ்திர சிகித்ஸையில் பிரவேசமில்லையென்னும் புத்தி விகாரத்தை உண்மையாய் விட்டுவிடுவானென்பது திண்ணம்.

இத்தகைய பொருந்திய குணமனைத்து மமைந்த பண்டைக் காலத்து சஸ்திர சிகித்ஸைகள் எல்லாவற்றையும் இகழக்கூடியவையென நினைத்து, அனியாயமாய் அறிவிலா அம்பட்டரிடம் ஒப்புவித்த எமது புத்தியின் புதுமையை என்னென்று கூறலாம்!

### இரஸ சாஸ்திரமும், பிரயோஜனமும்.

மேலும் ஆரியர் எண்வகையான அங்கங்களுடன் கூடிய சிகித்ஸா சாஸ்திரத்தில் நிபுணரா யிருந்ததுடன், இரஸ சாஸ்திரங்களிலும் திறமை பொருந்தியவரா யிருந்தனரென நாகார்ஜுனன் முதலிய மஹா ஸித்தர்களால் இயற்றப்பட்ட ரஸார்ணவம், ரஸஸித்தி, மந்தானபைரவம், ரஸஸாரம் முதலான நூல்களால் தாந்த்ரிகயுகத்தில் மஹோந்நத தசையில் இருந்ததாக அநேக சரித்திரங்களிலிருந்து வெளிப்படையா யுணரப்படுகின்றது. தாந்த்ரிக வைத்தியங்களை யுணர்த்துபவையான அந்நூல்களிலும் விஷயங்கள் கேவலம் பிணிகளைப்போக்கும் உபாயங்களை உபதேசிப்பது மட்டுமல்லாது, உலகத்திற்கு உபயோகமானவையும், பெருஞ்செல்வங்களைப் பெறுவதற்குக் காரணமானவையுமான வஜ்ரம். வைடூரியம் முதலிய இரத்தினங்களையும், பொன்னையும் நிர்மிக்கும் வழிகளைக் கூறி, அதிலும் திருப்தியடையாமல் இளமையில் இன்பங்களை யனுபவித்த பின்னர், மறுமையிலும் சாச்வதமான பேரின்பத்தைப் பெறுவதற்கு உபாயத்தை உணர்த்துவதான பாதரஸத்தைக் கொண்டே லோஹ ஸித்தியைச் செய்வதற்கேற்க தேஹ ஸித்தியையும் அடையலாமெனவும், அதைத் தானம்செய்து ஜீவன் முக்தி பெறக்கூடுமெனவும் தீர்மானிக்கப்பட்டுளது.

இரஸ சாஸ்திரம்.

1. இரஸகண்டம் — Chemistry.
2. சிகித்ஸாகண்டம் — Treatment with metals and their preparations.
3. இரஸாயனகண்டம் — Science of Reguvoration.
4. மந்திரகண்டம் — Science of Charms, Talismans, Incantations.
5. வாதகண்டம் — Alchemy.

என்று ஐந்து வகையாக இரஸசாஸ்திரம் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1. இரஸகண்டம்.—அப்ரகம், வைக்ராந்தம் முதலிய தாதுப் பொருள்கள், பொன், வெள்ளி, இரும்புமுதலிய லோஹங்கள். வஜ்ரம், வைடூர்யம், முத்துமுதலான இரத்தினங்கள் இவற்றின் உற்பத்தி பேதங்கள், சுரூபம் முதலானவைகளை நிரூபித்து, மேற்படி பதார்த்தங்கள் சிகித்ஸைக்கு உபயோகமாகும் வண்ணம் அவற்றின்

1. சுத்தி — Purification.
2. மாரணம் — Oxidisation.
3. ஸத்துவபாதனம் — Extraction of Metals.
4. த்ருதிகள் — Liquid extractions.

என்னும் நான்கு வகையான பரிணாமங்களையும். சுத்தி, மாரணம் முதலானவற்றிற்கு அவசியமான யந்திரங்கள், மூஷைகள் முதலியவைகளின் இலக்ஷணங்களையும். அவற்றின் பரிபாஷைகளையும் உணர்த்தும் பாகமாம்.

2. சிகித்ஸாகண்டம்.—சோதனம், மாரணம், ஸத்துவபாதனம், த்ருதி இவைகளால் பக்குவம் செய்யப்படும் அப்ரகம், பொன் இரும்பு முதலிய பொருள்களால் ஆக்கிய அவ்வப் பிணிகளைப் போக்கவல்ல ஒளஷதங்களைப் போதிக்கும் பாகமாம்.

3. மந்திரகண்டம்.—மந்திரங்களால் காய்ச்சல் முதலிய உடலைப் பற்றிய ரோகங்களையும், அபஸ்மாரம் முதலான மானஸிக வியாதிகளையும் சமனம் செய்யக்கூடிய விதங்களை அறிவிக்கும் பாகமாம்.



4. வாதகண்டம்.—வஜ்ரம், வைடூர்யம், பத்மராகம் முதலானவற்றை நிர்மாணம் செய்யும் வகைகளையும், பொன் வெள்ளிகளையுண்டாக்கும் விதங்களையும் தெரிவிக்கும் பாகமாம்.

5. இரஸாயனகண்டம்.—வியாதிகள் அனைத்தையும் விலக்கி, முதிர்வு வாராவண்ணம் உபயோகிக்கப்படும் ஒளஷத முறைகளையும், ஆகாயத்தில் அந்தர்த்தானமாய்ச் செல்லுவதற்கேற்ற குளிகைகளின் பிரயோகங்களையும், தேஹஸித்தியையும், ஜீவன்முக்தி உபாயங்களையும் உபதேசிக்கும் பாகமாம்.

இவ்வாறு ஐந்து கண்டங்களையும் விவரிக்கும் விஷயங்களைக் கொண்டு அனேக நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

மேற்படி வாதகண்டம், மந்திரகண்டம், இரஸாயனகண்டம் இவற்றின் விஷயங்கள் இக்காலத்தவருக்கு அதிசயோக்தியாகத் தோற்றக் கூடுமாகிலும், இப்பொழுது நாம் கேள்வியுறப்படுமவையும் காணப்படுமவையுமான விஷயங்களில்

போலிவைரம் — Artificial diamonds.
ஜெர்மென்வெள்ளி — German Silver.
கன்னடியன்பொன் — Canadian Gold.
ஆகாசயானம் — ஏர்ஷிப்

முதலியவற்றை நினைவுக்குக் கொண்டுவருவோமானால், அவை அதிசயோக்தியென எவரும் ஊகிக்கமாட்டாரென்று அறிகிறோம்.

மற்ற இரஸகண்டம், சிகித்ஸாகண்டங்களின் விஷயம் ஆக்ஷேபமேதுமின்றி அனைவராலும் ஒருங்கே ஒற்றுக்கொள்ளப்பட்டதே. இந்த இரஸசாஸ்திர விஷயங்களைக் குறித்து டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள் இயற்றிய இந்துகெமிஸ்ட்ரி யென்னும் நூலைப் படித்துப் பார்த்தால் இது நன்கு விசதமாகக்கூடும்.

காயசிகித்ஸையின் சிறப்பும், அழிவும்.

ஆரியர் வெகு காலத்திற்கு முன்னமும் சிகித்ஸா சாஸ்திரத்தில் மிகவும் புகழ்பெற்றனரெனவும், ஆதாரமின்றியே அபிவிருத்தி செய்து வந்தவரெனவும் மேல்நாட்டு வைத்திய வித்வான்கள் அனேகர் அங்கீகரித்துள்ள விஷயங்களுள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றனம்.—

"லண்டன் கிங்ஸ்காலேஜிலிருக்கும் எம். டி. எப். ஆர். அண்ட் எல். எஸ். என். பட்டதாரியான ஓ. எப். ராயல் துரையென்னும் ஔஷதி தத்துவசாஸ்திர பண்டிதர் இவ்வாறு கூறினர்.— "இப்பொழுது வைத்திய சாஸ்திரத்தின் கிளைகளாயிருக்கும் பலவகைப்பட்ட விஷயங்களைப் பற்றி இந்துக்கள் ஆதிகாலத்திலேயே அனேகவிதமான சிகித்ஸைகளை முறைகளுடன் கண்டு பிடித்தாரெனவும் தெரிவிக்கக்கூடிய இந்துக்களின் திறமையை அவரது பிராசீனத்தையும், ஆதாரமின்றியே அபிவிருத்தியின் நிலைமையும் தெரியப்படுத்துகிறது" என எனது அபிப்பிராயம். மேலும் ப்ரொபஸர் ஹோரெஸ் ஹோமன் வில்ஸன்; ஸர். ஹண்டர் விலியம்; கர்னல் க்ளார்க் ஜி. எம். எஸ். ஸர்ஜன் ஜெனரல், பர்மா முதலிய மேல்நாட்டு வைத்திய நிபுணராலும், புகழப்பெற்ற ஆயுர்வேத சிகித்ஸா சாஸ்திரம் மற்ற சிற்ப சாஸ்திராதிகளைப் போலவே அனேக முகாந்தரங்களால் அழியத் தலைப்பட்டது.

அவ்வாறு வரவர க்ஷீணித்து வந்தும் சிகித்ஸா சாஸ்திரமென்பது மற்ற வியாகரணம் முதலிய சாஸ்திரங்களைப் போலன்றி, உயிர்வகைகளனைத்துக்கும் ஆதாரமான சரீரஸம்ரக்ஷணைக்கு மிகவும் இன்றியமையாததாதலால், க்ஷீணதசையை யடைந்து வரினும் ஆர்யவித்தைகளில் ஆவலுள்ள தேசத்தவர் சிலரும் அந்தந்த காலங்களிலிருந்த அரசரும் அவ்வப்பொழுது சிற்சில நூல்களையு மியற்றிக் காப்பாற்றி வந்ததால் இவ்வளவு ஈனஸ்திதியிலாகிலும் காண்பதற்கு இடமுண்டாயிற்று.

ஆயுர்வேதோஜ்ஜீவநம்.

இவ்வாறு ஈனதசையிலுள்ள ஆயுர்வேத சிகித்ஸா சாஸ்திரம் நமது தேசத்திற்குத் தாயாயிருந்த ஸ்ரீ விக்டோரியா சக்கிரவர்த்தினி அவர்கள் அரசாளுவதற்கு ஆரம்பித்த நாள்முதல் ஸ்ரீராணியவர்களது செங்கோலின் திறமையினால் அவ்வக்காலங்களில் வடமொழி வித்தைகள் அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட்டன வாதலாலும், ஆயுர்வேத சிகித்ஸைகளுக்கு ஆதாரமாகவே விளங்கிக் கொண்டிருக்கும் கல்கத்தா நகரத்தில் வஸித்தவரான ஆயுர்வேத வைத்திய சிரோமணிகளெனப் புகழ்பெற்ற பிஷங்மகுடாமலமணி



ஸ்ரீ கவிராஜ த்வாரகாநாதஸேன், கவிரத்னம்: ஆயுர்வேத விசாரத கவிராஜ விஜயரத்னஸேன், கவிரஞ்ஜன் முதலியவர்களைப்போன்ற மஹான்களுக்கு மஹாமஹோபாத்தியாய என்னும் இராஜகீய பிருதுகள் அளிக்கப்பட்டன வாதலாலும் மறுபடி ஆயுர்வேதம் மேலோங்கி வளருவதற்கு வழியேற்பட்டது.

அன்றியும் 775 கிறிஸ்தவ சதாப்தத்திற்கு முன்பு அராபியர் ஸுச்ருதம், சரகம், மாதவநிதானம் என்னும் பிரஸித்த வைத்திய நூல்களை அவர்களுடைய பாஷையில் முதன்முதல் மொழிபெயர்த்தனரெனவும், அவற்றிலிருந்து க்ரீக்தேசத்தவர் தமது பாஷையில் மொழிபெயர்த்துக் கொண்டனரெனவும் டாக்டர் ராயல் ப்ரொபஸர் வில்ஸன் துரையவர்களால் தேசோபகாரமாய் வரையப்பெற்ற சரித்திரத்தினால் தெரியவருகின்றது போலவே, இக்காலத்து சாஸ்திராபிமானிகளான மஹான்கள் ஆயுர்வேத நூல்களை வங்காளி, இந்துஸ்தானி, மஹாராஷ்ட்ரம், ஆந்திரம், கர்நாடகம், திராவிடம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்த்தது மல்லாமல், ஆங்கிலபாஷையிலும் எழுதப்பட்டு பலநூல்கள் அச்சிடப்பட்டு மிருப்பதால், கேவலம் பாரததேசத்தவருக்கு மாத்திரமேயன்றி இங்கிலாந்து முதலான தேசாந்தரத்திலிருப்பவரும் தெரிந்துகொள்வதற்கு இடமேற்பட்டது.

கல்கத்தா ராஜதானியில் ஆயுர்வேதாபிவிருத்தி.

இவ்வகையாக அபிவிருத்திக்கு வரும் ஆயுர்வேத ஸம்பந்தமான சிகித்ஸைகளை வங்காளதேசத்தில் கடந்த வருஷத்தில் காலஞ்சென்றவரும், ஆயுர்வேதத்திற்கு நிதியென்று கூறக்கூடியவருமான மஹாமஹோபாத்தியாய கவிராஜ த்வாரகநாதஸேன் கவிரத்னம் அவர்களின் ஸாக்ஷாத் ஆசிரியரும், ஸர்வதந்திர ஸ்வதந்திரரும், சரகசதுராநனர் என்று புகழ்பெற்றவருமான ஸ்ரீ கங்காதர கவிராஜ் அவர்கள் வங்கதேசத்தில் அவதரித்து சரக ஸுச்ருதாதி க்ரந்தங்களுக்கு நன்கு வியாக்யானங்கள் எழுதி தேசத்திற்குப்பேருதவி செய்தனர். மேலும் சாஸ்திரமனைத்திலுமே அவருக்கிருந்த ஒப்பற்ற பாண்டித்யத்தினால் தர்க்கம், வியாகரணம், ஸாங்க்யம், தர்மசாஸ்திரம் முதலியவற்றிற்கும் வியாக்யானங்கள் எழுதி எல்லா

சாஸ்திரங்களையுமே சிஷ்யருக்குக் கற்பித்தார். தமக்கு அபிமான சாஸ்திரமான ஆயுர்வேத சாஸ்திரத்தை இக்காலத்து ஆயுர்வேத மஹோபதேசகர் என்று பெயர்பெற்ற மேற்படி மஹாமஹோபாத்யாயரவர்களுக்கும், இராஜேந்திர கவிராஜ் முதலியவர்களுக்கும் இலக்ஷிய லக்ஷணங்களுடன் போதிப்பித்ததாலும் அவரது சிஷ்ய பரம்பரைகளிலிருந்து வங்காளத்திலும் அதைச் சுற்றிலுள்ள விடங்களிலும் ஆயுர்வேதம் பரவி சிறப்படைகின்றது.

### பம்பாய் இராஜதானியில் ஆயுர்வேதாபி விருத்தி.

பம்பாயில் கடந்த 13 வருஷங்களாகப் பாரததேசத்திற்குப் பூஷணம்போன்ற ஆனரபில் டாக்டர் ஸர் பாலசந்திரகிருஷ்ண கே. டி. எல். எம். ஜே. பி., டாக்டர் தசமுக எம். டி., டாக்டர் போப்பட்ராம், எல். எம். எஸ்., ஜே. பி. முதலியவர்களால் ஓர் ஆயுர்வேத வித்யாசாலை ஏற்படுத்தப்பட்டு அதில் இலக்ஷிய லக்ஷணங்களுடன் ஆயுர்வேதத்தைக் கற்பிப்பதுடன், மேல்நாட்டு சிகித்ஸைகளுக்கேற்ற அனாடமி முதலிய பாகங்களும்சேர்ந்து கற்பிக்கப்படுவதால் ஆயுர்வேத பிரசாரம் பம்பாயிலும், அதைச்சார்ந்த விடங்களிலும் வியாபித்து வருகின்றது.

அல்லாமலும் மேற்படி ஆயுர்வேத வித்யாசாலையில் உத்தமபரீக்ஷையில் தேறியவர்களுள் சில சுதேச ஸோதரிகள்கூட இருக்கின்றனராகையால் ஆங்கு ஆயுர்வேத பிரசாரம் அதிகமாயிருக்கின்றதென தனிப்படக் கூறவேண்டிய அவசியமில்லையல்லவா?

மேலும் இவ்வாயுர்வேதத்தை இன்னும் அதிகமாய்ப் பரவச்செய்யவேண்டுமென வெகு விருப்பங்கொண்ட டாக்டர் ஸர். பாலசந்திரகிருஷ்ண அவர்களுடையவும், ஆயுர்வேத மஹோபாத்தியாய சங்கரதாஜி சாஸ்த்ரீ பதே அவர்களுடையவும் பெருமுயற்சியினாலும், பம்பாய்க்கு அருகிலுள்ள கோதாவரீ மஹாநதிக்கு பிறப்பிடமெனத்தகும் பஞ்சவடீ க்ஷேத்திரமென்று பெயர்பெற்ற நாஸிக நகரத்தில் ஸ்ரீ தர்ப்பங்காஸம்ஸ்தானாதிபதிகளான ஆனரபில் ராமேச்வர ஸிங் மஹாராஜா அவர்களது ஆதிபத்தியத்தின் கீழ் ஸ்ரீ பரோடா மஹாராஜா அவர்களின் போஷணையைப் பெற்ற ஸ்ரீ ஸயாஜீ ஆயுர்வேத வித்யாபீடமென்று ஒரு மஹாஸபையை



ஸ்தாபித்து அந்த ஸபையின் மூலமாய் அந்தந்த தேசங்களிலுள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் வைத்தியத்திற்கும் மிகவும் உத்ஸாஹத்தைக் கொடுப்பதால் ஆயுர்வேத சிகித்ஸாசாஸ்திரங்கள் பம்பாய் இராஜதானியிலும், மத்திய மாகாணத்திலும் சாகோபசாகமாய் செழித்தோங்க விடமுண்டாயிற்று.

### சென்னைராஜதானியில் ஆயுர்வேதாபிவிருத்தி.

சென்னையில் ஸ்ரீ கன்னிகாபரமேச்வரீ ஸபையோர் 12 வருஷங்களுக்கு முன் ஆயுர்வேத வைத்தியசாலையையும், 7 வருஷங்களுக்குமுன் ஆயுர்வேத காலேஜையும் ஏற்படுத்தி, அவற்றில் ரோகிகளுக்குப் பிணியைப்பற்றறுப்பதுடன், பஞ்சாப், வங்காளம், ஐதராபாத், மைசூர், மலபார்முதலிய தூரதேசங்களிலிருந்து வந்து கல்விகற்கும் மாணாக்கருக்குப் பணவுதவி செய்து, ஆயுர்வேதத்தை இக்ஷிய லக்ஷணங்களுடன் கற்பிப்பதோடு, டாக்டர் சிங்காரவேலு முதலியார் எல், ஆர். ஸி. பி. அண்ட் எஸ். அவர்களுடையவும், டாக்டர் என். வெங்கடசாமி நாயுடு எம். பி. ஸி. எம். அவர்களுடையவும் உதவியினால் ஆங்கிலேய சிகித்ஸையிலுள்ளபடி அனாடமி, பிஸியாலஜி, மிட்வைபரி, மெடீரியாமெடிகா, ஹைஜீன், கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ் இவைகளுடன் ஆயுர்வேத வித்யாதானம் செய்வதாலும், ஆனரபில் ஸ்ரீ வீ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல். அவர்கள் மைலாப்பூரில் ஆயுர்வேத வைத்தியசாலை பாடசாலைகளை ஏற்படுத்தி சிகித்ஸாதான வைத்தியவித்யாதானங்களைச் செய்வதாலும் சென்னை ராஜதானியிலும் ஆயுர்வேதம் வியாபித்து நல்ல தசையை யடைகின்றது.

### கேரள தேசத்தில் ஆயுர்வேதாபிவிருத்தி.

மலையாளதேசத்தில் அனந்தசயனம், கொச்சி, கொல்லங்கோடு முதலிய ஸம்ஸ்தானங்களின் வைத்தியர்களாலும், அந்தந்த ஸம்ஸ்தானாதிபதிகளாலும் எட்டு வருஷங்களுக்கு முன் 'ஆர்ய வைத்தியஸமாஜம்' என்று ஒரு வைத்தியஸபை ஏற்படுத்தப்பட்டு, அங்கு கல்வி கற்பவருக்கு உதவிசெய்து கல்வியைக் கற்பித்துவந்து, வருஷத்திற்கு ஒருமுறை அங்குள்ளப் பட்டணங்களில் ஏதேனும் ஒன்றில் அவ்வைத்தியஸமாஜத்தோர் சேர்ந்து அங்கு

பரீக்ஷையில் தேறிய மாணாக்கருக்கு உத்ஸாஹத்தை யூட்டுமாறு நன்கொடைகளளித்து, வைத்திய சிரேஷ்டருக்கு மிதமிஞ்சி ஸந்தோஷமுண்டாகும் வண்ணம் பற்பல விஷயங்களான உபந்யாஸங்களைச்செய்து ஆர்ய வைத்தியத்தை அபிவிருத்தி செய்கின்றனராதலால், மலையாளதேசத்திலும் ஆயுர்வேதம் செழித்தோங்குகின்றது.

### கர்ணாடதேசத்தில் ஆயுர்வேதாபிவிருத்தி.

தென்தேசத்திற்குள் ஆர்ய வித்யைகளுக்கெல்லாம் முக்கிய ஸ்தானமென்று பெயர்பெற்ற கர்ணாட தேசத்திற்கு இராஜதானியான மைசூர்நகரத்து ஸ்ரீ கிருஷ்ணராஜவுடையார் பஹதூர்; ஜி. ஸி. எஸ். ஐ. மஹாராஜா அவர்கள் இதுவரையில் அகில சாஸ்திரங்களையும் செழித்தோங்கச் செய்வதற்கு உத்தேசித்து, பெரிய பாடசாலைகளை ஸ்தாபித்து, சாஸ்திரம் அனைத்தையும் அபிவிருத்திக்குக் கொண்டுவந்ததுபோலவே, ஆயுர்வேதத்தையும் அபிவிருத்திக்குக் கொண்டுவந்ததுமல்லாமல், இப்பொழுது இன்னும் அதிகமாய் அதைச் செழிக்கச் செய்யும்பொருட்டு, ஓர் ஆயுர்வேத காலேஜை போனவருடம் ஏற்படுத்தி, அதில் மாணாக்கருக்கு ஆயுர்வேத வித்யாப்பியாஸத்துடன்கூட அனாடமி, பிஸியாலஜி முதலிய ஆங்கில சிகித்ஸா பாகங்களையும் கற்பித்து, அதில் தேறியவரைக் கொண்டு அவரது இராஜ்யங்களிலெங்கும் சிறு கிராமங்களிலும் ஆயுர்வேதசிகித்ஸையைப் பரவச்செய்ய பெருமுயற்சியுடைய மஹாராஜா அவர்களிடம் நாம் அனைவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவராகின்றோம். ஆயுர்வேதம் பரவுவதற்கு வழிகாட்டுபவரான ஸ்ரீமைசூர்மஹாராஜா அவர்களைப் போலவே அந்தந்த ஸம்ஸ்தானாதிபதிகளுங்கூட அவரவரது இராஜ்யங்களுள் ஆயுர்வேதகலாசாலை வைத்தியசாலைகளை ஏற்படுத்தி இவ்வித்யையைப் பரவச்செய்தால், ஆயுர்வேதம் வெகுதுரிதமாக எங்கும் வியாபித்துவிடுமென்பதில் ஐயமுமுளதோ?

### மற்ற விடங்களிலும் ஆயுர்வேதாபிவிருத்தி.

மேலும் பரோடா, ஜயப்பூர், க்வாலியர், உதயபூர், காச்மீரம் முதலிய இராஜ்யங்களில் அந்தந்த ஸம்ஸ்தானாதிபதிகளால் ஸம்ஸ்



கிருதவித்யைகளெல்லாம் அபிவிருத்தி செய்யப்படுவனபோல் இவ்வாயுர்வேதசாஸ்திரம் மட்டும் மாணாக்கருக்குக் கற்பிக்கப்பட்டு, கேவலம் சாஸ்திரம் மாத்திரம் விருத்திக்குக் கொண்டுவரப்படுவதாகத் தெரியவருகின்றது. ஆகிலும் பரோடாமுதலான இராஜ்யாதிபதிகள் இலக்ஷிய லக்ஷணங்களுடன் கூடிய இச்சிகித்ஸா சாஸ்திரத்தையும் இலக்ஷியத்தையும் போதிப்பிக்காமலிருப்பது விஸனிக்கத்தக்கதே.

### மிருதியாய் அழிந்த ஆயுர்வேதாம்சங்கள்.

சிகித்ஸாசாஸ்திரமானது கேவலம் படிப்பதால் மட்டுமாவது, அல்லது அப்பியாஸம் செய்வதினால் மாத்திரமாவது உபயோகமாகக் கூடியதல்ல; ஆகிலும் ஔஷதத்தினாலேயே ஸாதிக்கக்கூடிய சில சிகித்ஸைகள்மட்டும் சிறிதளவு இலக்ஷிய லக்ஷணங்களுடன் கூடித் தொன்று தொட்டுவருவதாகக் காணக்கூடியதாயிருக்கின்றது. சஸ்திரசிகித்ஸைக்கு மாத்திரம் இலக்ஷணம் சிறிது தெரிந்திருந்தும் அப்பியாஸபாகமானது கேவலம் ஸம்ஸ்க்ருத கிரந்தத்திலேயே சரித்திரமாக மாத்திரம் ஏற்பட்டுளது. மேலும் தனிப்பட ஸ்வதந்திர சிகித்ஸைகளெனப் பிரஸித்திபெற்ற கண், காது, நாசி, தொண்டை முதலியவற்றைப் பற்றிய சாலாக்யதந்திர சிகித்ஸைகள்-இவற்றால் இலக்ஷணஞ்ஞானம் சிறிதளவு ஏற்படுவதாக தோற்றியபோதிலும்— அப்பியாஸ பரம்பரையில் மிகப்பிரஸித்திபெற்ற அவ்விதேஹ மஹாராஜாவுடன் கூடவேபோனதுபோலிருப்பதால், கனவிலுங்கூட நம்மவருக்கு சாலாக்ய சாஸ்திரங்களாகும் கண்முதலானவற்றின் சிகித்ஸைகள் தனியான சிகித்ஸைகளெனத் தோன்றாமலிருப்பதும் ஓர் ஆச்சரியமல்ல.

மேலும் மருத்துவசாஸ்திரம், சரீரதத்துவ சாஸ்திரம், விஷசாஸ்திரம் இவைகளோ ஆயுர்வேதத்தில் விசேஷமாயிருக்கின்றனவென்றாலும், அவை இக்காலத்து வைத்திய சிரேஷ்டருக்குப் போலிசாஸ்திரங்களாகப் புலப்படுவதாய்த் தோற்றுகின்றன.

ஔஷதி தத்துவசாஸ்திரம், குணபாடம் இவையோ சிறுவருக்குக் கற்பிக்கும் பாட்டுகளைப்போல் உருப்போடுவதிலேயே முடிவுபெற்றது.

இரஸசாஸ்திரத்தில் ஐந்து பாகங்களிலும் சேர்ந்த தாதுப்பொருள்கள், அவற்றின் சோதனை, மாரணம் முதலியவற்றுள் சிறிதளவு அறிவு இருந்தபோதிலும், இயந்திராதி நிர்மாணங்கள், அவற்றிலிருந்து இரஸ சுத்தி முதலியவை, குளிகாதி நிர்மாணம், வாதகண்டத்திலுள்ள இரத்தினாதி நிர்மாணமுதலிய முறைகள் பகட்டுவித்தைகளைக்காட்டும் தொம்பரவர் சொற்களைவிட ஈன நிலைமையில் இருக்கின்றன.

ஆயுர்வேதத்தின் மேன்மை.

நெடுநாட்களுக்கு முன் இலக்ஷிய லக்ஷணங்களுடன் பெயர்பெற்றிருந்த ஆயுர்வேத சிகித்ஸாசாஸ்திரத்தில் பலவிஷயங்களில் நம்மவருக்குண்டான அறிவு இப்பொழுது அழிவுபட்டிருப்பினும், கேவலம் ஔஷதத்தினால் போக்கக்கூடிய பிணிகளிற் கூட பாமரவைத்தியர்களென்பவரால் உபயோகிக்கப்படும் ஸாதாரண மருந்துகள் குரூரமானவியாதிகளையும் நிவிருத்திசெய்வதில் நிகரற்றவையென, புகழ்பெற்ற மேல்நாட்டு வைத்திய சிரேஷ்டராலும் கொண்டாடப்பட்ட ஆயுர்வேதத்தினுடையவும், அதிலுள்ள சிறப்புற்ற விசேஷங்களுடையவும் மேன்மையை வர்ணிக்கமுடியாது. இவ்வாறு சிறந்தவைத்தியரால் உபயோகிக்கப்படும் மருந்துகளில் ஔஷதிகளுக்கே இத்தகைய கௌரவம் இருந்தால், ஆர்யவைத்தியமனைத்தையும் இலக்ஷிய லக்ஷணங்களுடன் அப்பியஸித்தால் நூற்றுக்கு ஒருவியாதியாகிலும் குணம் பெறாமல் தவறிப்போமென நினைக்கவும் கூடுமோ?

ஆயுர்வேதத்தை விருத்திசெய்யும் வழி.

வெகு நாட்களுக்கு முன் மிகவும் பிரஸித்திபெற்ற சஸ்திரசிகித்ஸை, பிரஸவசிகித்ஸை முதலிய வைத்தியங்களை மீண்டும் செழிக்கச் செய்யவேண்டுமென்றால் ஒருவருக்கொருவர் பொறுமையைப் பரிஹரித்து மேல்நாட்டாரைப்போலவே குருமுகமாய் இலக்ஷிய லக்ஷணங்களுடன் கூடிய ஆயுர்வேதசிகித்ஸைகளைக் கற்று, நமக்குக்கேவலம் அப்பியாஸ பாகத்தில் க்ஷயத்தை யடைந்துப் போலி சாஸ்திரம்போல் தோற்றும் சஸ்திரசிகித்ஸை முதலியவற்றையும், இப்பொழுது அந்தந்தத் தனித்தனி சிகித்ஸைகளில்,



இலக்ஷிய லக்ஷணங்களில் வெகு பிரஸித்திபெற்ற மேல்நாட்டு வைத்தியர்களின் உதவியினால் அப்பியஸித்தால் ஆயுர்வேத ஸம்பந்தமான சஸ்திராதி சிகித்ஸா பாகங்களனைத்தையும் சிறிது காலத்திலேயே மேலான நிலைமைக்குக் கொண்டுவருவோமென்பதில் ஐயமில்லை.

இவ்வாறு ஆயுர்வேதத்தை மேல்நாட்டு வைத்தியர்களின் உதவியால் அப்பியஸித்து அத்துடன் திருப்திபெறாமற் பிரதிக்ஷணமும் ஆங்கிலேயவைத்திய நிபுணர்கள் புதிய புதிய விஷயங்களை யுக்தியினால் அறிந்து இலக்ஷியலக்ஷணங்களுடன் ஸித்தாந்தத்திற்குக்கொண்டுவருவது போலவே "ஆசார்யஸ் ஸர்வசேஷ்டாஸு லோக ஏவ ஹி தீமத:" என்னும் சுக்கிராசார்யரது வாக்கியத்தை நினைத்து, உலகத்தோரது வழியை ஆதாரமாய்ப் பற்றிக்கொண்டு, புது புது விஷயங்களில் புத்தியைப் புகவைத்து, ஒரு நொடிப்பொழுதையும் வீணாக்காமல், வித்யையைத் தேடுவதில் ஆவலுள்ளவரா யிருப்பதை முக்கிய காரியமாய் எண்ணி, நாள்தோறும் தாம் செய்யும் அப்பியாஸ விசேஷத்தினால் ஸம்பாதிக்கப்படும் நவீனமான விஷயங்களை ஸமாசார பத்திரிகைகளின் மூலமாய் பிரசுரப்படுத்தி, பலதேசங்களிற் பண்டிதரின் சர்ச்சைகளுக்கு அவகாசத்தை ஏற்படுத்தி, ஸித்தாந்தங்களை கிரந்தரூபமாய் செய்வதும் ஆயுர்வேதம் மறுபடியும் மேலான பதவிக்குக்கொண்டு வரக்கூடிய வழியென வேறாகக் கூறவும் வேண்டுமோ?

ஆயுர்வேதாபிமானிகளுக்கு வேண்டுகோள்.

ஓ பாரத தேசத்தவர்காள்! ஆர்ய ஸந்ததியரான நாம், நமது தேசம் காலம் ஆசாரம் தன்மை முதலியவற்றிற்குச் சிறிதும் விரோதமில்லாமல், நமது தேசத்தின் சீதோஷ்ண நிலைமைகளை அனுஸரித்துப் பகவானது நிஷ்காரண கருணைகடாக்ஷத்தினால் படைக்கப்பட்ட தர்மார்த்த காமமோக்ஷங்களென்னும் நான்குவகையான புருஷார்த்தங்களுக்கு ஸாதகமான இந்த ஸ்தூல சரீரத்திற்கு அனுகூலமான சஸ்திராதி சிகித்ஸைகளாகும் அங்கங்களுடன் விளங்கும் ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த முழுமுயற்சியுடையவராய், அந்தந்தப் பட்டணங்களில் ஆயுர்வேதாபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆயுர்வேதகலாசாலை வைத்திய

சாலைகளை அபிவிருத்திக்குக்கொண்டுவந்தும், இல்லாதவிடங்களில் வைத்தியசாலை கலாசாலைகளை ஸ்தாபித்தும், சிதிலமாகும் ஆயுர்வேத நூல்களை அச்சிற்பதிப்பித்தும், கூடியமட்டிலும் அந்தந்தத்தேச பாஷைகளில் எளிய நடையில் நூல்களை யியற்றிப் பிரசுரப்பித்தும், நமது ஸோதரீ ஸோதரர்களுக்கு இவ்வாயுர்வேதத்தைக் கற்பித்தும், நமது ஜீவிதகாலமெல்லாம் திடகாத்திரர்களாய் ஆரோக்கியத்துடன் இருக்குமாறு அப்பராத்பரனிடம் நன்றி பாராட்டுபவராய் இருக்கவேண்டுமென ஸகல இரஸிக ஜனங்களுக்கும் விதேயனாய் விண்ணப்பம் பண்ணிக்கொள்கின்றேன்.

முற்றிற்று.


ஸ்ரீ:

இப்பாரதகண்டத்தில் கல்கத்தா, பம்பாய், காசி முதலிய
நகரங்களில் நடந்த வெகுசிறந்த பொருட்காட்சிசாலைகளில்
தங்க மெடல்களையும், முதல்தரமான யோக்யதாபத்திரங்களையும்,
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கத்தவால் மஹாராணியினிடமிருந்து மஹாமஹரிசிவாக
ஒளஷதங்களுக்காக தங்க மெடலையும் பெற்ற
ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

**பண்டித டி. கோபாலாசாரியர், எ. வி. எஸ்.,**

அவர்களால் சாஸ்திரோக்தமாய் தயார்செய்யப்பட்ட

## ஆயுர்வேத ஒளஷதங்கள்.

பிரமேஹபஞ்ஜனீ.—மதுமேஹம், (சர்க்கரையுள்ள மூத்திரரோகம்) வெகுமூத்திரம என்கிற இத்தகைய குரூரமான ரோகங்களைப் போக்கி எவ்வித அவஸ்தையிலும் ரோகிக்கு கஷ்டத்தை நிவிருத்தி செய்வதற்கேற்றவாறு தயார்செய்யப்பட்ட, நிச்சயமாய் தீங்குகளொன்றையும் உண்டுபண்ணாததான, ஒளஷதம். இவ்வௌஷதத்தால் ஸௌகமடைந்த பெரியமனிதர் பலர் இதனால் தமக்குநேர்ந்த பிரயோஜனங்களை நன்றி செலுத்தி நன்கு ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இதன் விலை ரூ. 2-8-0.

வஜ்ரதந்தசூர்ணம்.—தினந்தோறும் பல்துலக்குவதால், பற்களிலிருந்து இரத்தம் பெருகவொட்டாமற்செய்து, பற்களைச்சேர்ந்த மற்ற வியாதிகளையும் அடியோடு போக்கி, பற்களின் ஈறுகளுக்கு வெகு வன்மையைக் கொடுக்கும்.

ஒருடின் விலை 4 அணா.

மிருகமதவடி.—கஸ்தூரி சரீரவலிவை விருத்திசெய்ய வல்லதென அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மாத்திரைகளடங்கிய ஒரு ஸீஸா ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது மிகவும் இன்றியமையாதது. சரியான காலத்தில், இந்தமாத்திரையைப் பிரயோகிக்கப்படுமானால், காய்ச்சல் வரவொட்டாமல் செய்துகொள்ளக்கூடும். அன்றியும் ஜலதோஷம், மார்வலி, ஸந்நிபாதம் (ஜன்னி) முதலியவற்றைப் போக்கும்.

விலை ஸீஸா 1-க்கு ரூ. 1.

பூஜ்யபாதவடி.—நரம்புகளின் ஜாட்யத்தைப்பற்றியுண்டாகும் நோவுகளைப் போக்குவதற்கு இது ஆச்சரியகரமான ஒளஷதம்.

மேலும் பார்சுவவாயுக்களையும், சச்சு வாயுக்களையும் அடியோடு போக்கிவிடும். இருதயத்திற்கு மிகுதியான வலுவையுண்டாக்கும்.

ஸீஸா ஒன்றுக்கு விலை 12 அணா.

<u>பஞ்சாநந லேபம்.</u>— இவ்வௌஷதம் படைகளைப் பற்றறப் போக்கி, விடாமல் சிறிது நாட்கள் உபயோகித்துவந்தால் மறுபடியும் எப்பொழுதும் அவற்றை யுண்டாகாவண்ணமும் செய்யவல்லது. மற்றப்படைமருந்துகளைப்போல் இது துணிகளில் கறையை யுண்டுபண்ணமாட்டாது.

டப்பி 1-க்கு விலை அணா 8.

<u>ஸுகவிரேசநவடி.</u>—நீங்கள் எவ்விடத்திற்கேனும் பிரயாணம் செய்யவேண்டி நேரிடுமாகில், இவ்வௌஷதத்தில் ஒருஸீஸாவையும் கூட வைத்திருக்கவேண்டும். மாத்திரை ஓர் பயறளவுக்குமேல் பருமனாயிராது. வெறுப்பில்லாமல் உபயோகிக்கக் கூடியது. மலபந்தத்தைப்போக்கி, சரீரத்தை ஆரோக்யஸ்திதியில் வைக்கும். சிறுகுழந்தைகளும் உபயோகிக்கக்கூடும்.

ஒரு ஸீஸா விலை அணா 8.

<u>அஜீர்ணபஞ்சாநநம்.</u>—அஜீர்ணத்தினால் உண்டாகும் வியாதிகளில் காய்சசல், தூக்கமின்மை, மாரில்படருவு, சோர்வு, பலஹீனம், வயிற்றுவலி என்பவைகளையும், அஜீர்ணத்தையும் போக்குவதற்கு எமது அஜீர்ணபஞ்சாநநம் இராஜௌஷதம். வயிற்றில் கனமாயிருக்கும்போது இதையுபயோகித்து ஸௌக்கியம் பெறக்கூடும்.

டின் விலை ரூ. 1.

<u>ஜீவாமிருதம்.</u>— பலஹீனத்தைப் போக்கி, வியாதிகளை வொட்டாமற் செய்வதற்கு பேர்போன மருந்து. இலேசாய் அயம் சேர்ந்திருப்பதுமன்றி இரத்தவிருத்திசெய்து ... த்தையுண்டாக்கி, சோர்வைப்போக்கி, சரீரஸௌக்கியத்தை ... ஸ்திதிக்குக் கொண்டுவருவதில் நிகரில்லாதது.

விலை ஸீஸா ஒன்றுக்கு ரூ. 3.

<u>தாம்பூலவடி.</u>—தினந்தோறும் தாம்பூலத்துடன் உபயோகிப்பதற்கே ஏற்பட்டது. மிகவும் வலுவைத்தருவதோடு, தாம்பூ... ருசியை யுண்டுபண்ணி, வாயின் துர்க்கந்தத்தைப் போக்கி ... ஸ்தானத்திற்கும், கண்டத்தின் தொனிக்கும், ஜீர்ணசக்திக்கும் அனுகூலத்தை யுண்டாக்கும்.

50 மாத்திரைகளடங்கிய ஸீஸா 1-க்கு அணா 8.

<u>கேசவிரணாதனதைலம்.</u>—சிரஸ்ஸை குளிரச்செய்து, மயிர்கள் உதிர்ந்து போகாவண்ணம் அவைகளை வளரவும்செய்து, அகாலத்தில் ஏற்படும் நரை, தலையும் தடுக்கும், கருநிறமுண்டுபண்ணுவத...



... ஏற்பட்ட எண்ணெய்களைவிட இதை யுபயோகிப்பதாலுண்டாகும் லாபம் ஒப்பில்லாதது.

ஸீஸா 1-க்கு விலை ரூ. 1.

<u>விருஷ்யயோகம்.</u>—சரீரத்திற்கு வீர்யவிருத்தியைக்கொடுத்து வலுவை யுண்டாக்குவதில் வெகு சிறந்ததென்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது. மூளைக்கும், மூளையைச்சேர்ந்த நரம்புகளுக்கும், பிரதான அவயவத்திற்கும் நல்லவலுவையும் இரத்தவிருத்தியையும் உண்டுபண்ணுவதில் இது ஸஞ்ஜீவி போன்றது.

டின் 1-க்கு விலை ரூ. 1-4-0.

<u>பிருகுவடி.</u>—இரண்டு நாட்களில் மேகவெட்டையைப்போக்கி, மர்மஸ்தானத்திலிருந்து பெருகும் விஷநீரை நிறுத்தும். நெடுநாட்களாய் கஷ்டப்படுத்தும் வியாதிகளில், ஒருவாரகாலம் உபயோகிப்பதால் ரோகியை மிகவும் நல்லஸ்திதிக்குக்கொண்டுவருவது நிச்சயம்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1-8-0.

<u>அமிருதாமலகதைலம்.</u>— தோலுக்கும் மூளைக்கும் நல்லவலுவையும், கண்களுக்குக் குளிர்ச்சியையும், மயிர்களுக்கு செழிப்பையும், மிருதுத்தன்மையையும் காந்தியையும் உண்டுபண்ணுவதான அப்யஞ்ஜனதைலம். இது தலைவலி, எரிச்சல், ஒற்றைத்தலைவலி முதலியவற்றையும், கண்களில் நீர்பெருகுவதையும், பித்தத்தைச் சார்ந்ததையும், சரீரதாபம் முதலிய துர்க்குணங்கள் அனைத்தையும் போக்கும். மாணாக்கருக்கும், புத்தியை அதிகம் உபயோகித்து வேலைசெய்யும் ஒவ்வொருவருக்கும் இது எப்பொழுதும் கையில் இருக்கத்தக்கது.

ஸீஸா 1-க்கு விலை அணா 12.

<u>அசோகவடி.</u>—ஸ்த்ரீகளுக்கு நேரிடும் பலவித துரவஸ்த்தையை வெருட்டி துலைப்பதற்கு இது வெகுசிறந்த மருந்து. ருதுஸம்பந்தமான வலிகளையும், மற்றும் பெண்டுகளின் பிணிகளையும், இரஜஸ் ... ), கர்ப்பாசயம் இவை பலவகையான காரணங்களால் கெட்டுப்போவதால் ஏற்படும் எல்லாவியாதிகளையும் அடியோடு அகற்றும். வியாதி ... வாரணமான பின்பு கர்ப்போத்பத்தியும், ஸுகபிரஸவமும் ... ஔஷதத்தை யுபயோகிப்பதால் நேரிடும்.

ஸீஸா 1-க்கு விலை அணா 12.

<u>லித்தகுந்தகரஸாயனம்.</u>— குஷ்டவியாதியைப் போக்குவதில் வெகு பெயர்பெற்றது. இரத்தத்தை சுத்திசெய்யுங் குணமுடையதானதால், இது தோலைப்பற்றிய வியாதிகள் அனைத்தையும் சில தினங்கள் உபயோகித்த மாத்திரத்திலேயே நிவிருத்திசெய்யும்.

ஏழுநாள் மருந்துக்கு விலை ரூ. 2-8-0.

மானஸோல்லாஸினி.—விசேஷமான பரிச்ரமத்தாலும், விசாரத்தாலும், மற்ற வியாகுலத்தாலும் மூளை பலயீனமானவருக்கு வெகு நன்றாய் உதவும். மனஸ்ஸு புத்தி இவைகளைப் பலப்படுத்துவதில் நிகரில்லாதது. பரீக்ஷைக்குப் படிக்கும் ஒவ்வொருவரும் இதை வாங்கி யுபயோகிப்பது மிகவும் அவசியம்.

ஸீஸா 1-க்கு விலை 2-8-0.

ரக்தசோதக.—மேஹ காரகத்தினாலும், இரஸ தோஷங்களாலும், இன்னும் பலவித காரணங்களாலும் கெட்டுப்போகும் இரத்தத்தை சுத்தமாகச் செய்யும். சொறி, சிரங்கு, படை, தேம்பல் முதலிய தோலைப்பற்றிய ரோகங்களை நிர்மூலமாக்கும். வாய்ப்புண்களையும், அப்போதைக்கப்போது வரும் கண்ணோய்களையும் விலக்கும்.

புட்டி 1-க்கு விலை 2-8-0.

அபலாஸஞ்ஜீவனி.—ஸ்த்ரீகளுக்குண்டாகும் மயக்கம் மூர்ச்சைகளுக்கு சித்தௌஷதம். வாலிபப்பருவத்து ஸ்த்ரீகளுக்கு அனேக காரணங்களாலுண்டாகும் அபஸ்மாரம், மூர்ச்சை, கர்ப்பாசய தோஷங்கள், பலவித மனோவிகாரங்கள் இவற்றைப்போக்கும். கர்ப்பிணிகள் இதை யுபயோகித்தால் கர்ப்பாசயத்திற்கு மிகவும் பலத்தையும், ஸுகபிரஸவத்தையும் உண்டுபண்ணும். கர்ப்பிணிகளுக்குண்டாகும் வாந்தி, வயிற்றில் எரிச்சல், பாண்டுரோகம் இவற்றை நீக்கும். மேலும் இது ஸ்த்ரீகளுக்கேயன்றி பொதுவாய் மனிதரனைவருக்கும் நேரிடும் மூர்ச்சை, அபஸ்மாரம் (காக்கைவலி) முதலியவற்றையும் குணப்படுத்தும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

விருச்சிகதம்சனிவாரணி.—தேள் கொட்டியவிடத்தில் இதைத் தேய்த்தால் ஒரு நிமிஷத்திலேயே கொட்டினவிடத்திற்கூட பாதையில்லாமற் செய்யவல்லதென அனேகமாயிரம் மஹான்கள் கொண்டாடுகின்றனர். பல்லாரி, நெல்லூர், பெங்களூர் முதலிய விடங்களிலிருப்பவரேயன்றி, பர்மா முதலிய தூரதேசத்திலிருப்பவருங்கூட தேள் கொட்டியதற்கு இதைவிட வேறொருமருந்து தகுந்தது கிடையாதென்று நற்சாக்ஷி பத்திரங்கள் கொடுத்திருக்கின்றனர்.

ஒரு டப்பி விலை அணா 8.

ஜம்பீரரஸாயனம்.—பித்தத்தைப்போக்க சிறந்தது. வாயில் நீர் அதிகம் சுரப்பது, மார்வலி, மார் எரிச்சல், வயிற்றுவேதனை. வாந்தி முதலிய பித்தவிகாரங்களுக்கு மிகவும் உயர்ந்த மருந்து. பித்தத்தினாலுண்டாகும் அஜீர்ணம், கர்ப்பிணிகளுக்கு நேரிடும் பித்தவிகாரம் இவைகளுக்கு மிகவும் குணம் செய்யும்.

புட்டி 1-க்கு விலை அணா 8.



ச்யவனபிராசனம்.—உப்பஸம், இருமல், க்ஷயஇருமல், ஸாதாரண இருமல், மாசசெனி, காரகம் இவற்றை குணப்படுத்தும். மாருக்கும். ச்வாஸப்பைகளுக்கும் வலுவைத்தரும். க்ஷயரோகிகளனைவருக்கும் அதிகபோஷாப்பையும் சக்தியையும் உண்டாக்கும். பாலர் முதல் விருத்தர்வரையில் அனைவரும் உபயோகிக்கத்தகுந்தது. பலத்தை யுண்டுபண்ணுவதற்காக உபயோகிக்கப்படும். மீனெண்ணெயைப் பார்க்கினும் ஆயிரமடங்கு அதிகமாய் வேலை செய்யும். உப்பஸம் முதலிய ச்வாஸப்பையைப்பற்றிய ரோகங்களை வரவொட்டாமற் செய்யும்.

டின் 1-க்கு விலை ரூ. 2-8-0.

சந்த்ரஸவம்.—மூத்திரநாளத்தின் எரிச்சலையும், மூத்திரத்வாரத்திலிருந்து அனேக காரணங்களால் பலவிதமாய் பொசியும் துர்நீர்களையும், இரத்தம் அல்லது வெள்ளையாக நீர்கள் அதிகம் வெளிப்படும் பெரும்பாடு என்னும் வியாதியையும், வெகு மூத்திரத்தையும், நாபிவிரணத்தையும், சரீரதாபத்தையும் போக்கும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

அச்வினிவடி.—தினந்தோறும் வரும் ஜ்வரங்களையும், தினம் விட்டு தினம் வரும் ஜ்வரங்களையும், வருஷாந்தமளவிலும் விடாமல் தொடரும் காய்ச்சலையும், குளிர்க்காய்ச்சலையும் வெகு சீக்கிரத்திற் போக்கும். ஸீஸா 1-க்கு விலை அணா 12.

சந்திரகலா.—ஒற்றைத் தலைவலி, மற்றும் எல்லாவிதமான தலைநோவுகள், சளி, மார்ச்சளி. இருமல், ஸாதாரண வீக்கங்கள், கீல்வாயுக்கள் முதலியவற்றில் இதைத் தேய்த்தவுடன் பாதைமாயமாய்ப் போய்விடும். இது வீடுகள்தோறும் இருக்கத்தகுந்த குடும்பௌஷதம்.

புட்டி 1-க்கு அணா 8.

மகரத்வஜ.—ரோகங்கள் எதும் வராமலிருக்கச் செய்வதிலும், அனேக காரணங்களால் பலயீனமாய் விட்டவர்களுக்குப் பலத்தை யுண்டுபண்ணுவதிலும் இந்துவைத்தியசாஸ்திரத்தில் இவ்வளவு பெயர்பெற்ற சிறந்த மருந்து வேறொன்று இலது. இது தங்கம் முதலிய விலையுயர்ந்த பதார்த்தங்களால் தயார் செய்யப்பட்டது.

விலை தோலா 1-க்கு ரூ. 24; 7 வேளை மருந்துக்கு ரூ. 1.

ஸித்த மகரத்வஜ.—மேற்கூறிய மருந்தைப்போலவே மிகவும் அதிகமான பலத்தையும், மூளை நரம்புகளுக்கு நல்ல சக்தியையும் உண்டாக்கும். நபும்ஸகதோஷத்தையும் நீக்கும். நல்முத்து பொன், மற்றும் சிறந்த லோஹங்களால் இது தயார் செய்யப்பட்டது.

விலை தோலா 1-க்கு ரூ. 80; 7 நாள் மருந்துக்கு ரூ. 5.

நாராயண தைலம்.—பார்சுவவாயு, சக்கவாயு, கீல்வாயு, வீக்கங்கள், சிரஸ்ஸைப்பற்றிய வாயு முதலியவற்றிற்கு மேலே தேய்ப்பதால் நல்லகுணத்தை நிச்சயமாய் உண்டுபண்ணும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2-8-0.

நாடிவிரணாந்தகம்.—ரணபுரைசிலந்திக்கு வஜ்ராயுதம் போன்றது. பல பெரியமனிதர் உபயோகித்து, இதற்கு இப்பெயர் ஏற்றதாக ஏற்பட்டதென கொண்டாடியிருக்கின்றனர்.

டப்பி 1-க்கு விலை அணா 12.

மாதுலுங்க ரஸாயனம்.—கர்ப்பிணிகளுக்கும் கர்ப்பகாரணங்களாலுண்டாகும் வாந்தி முதலிய வியாதிகளையும் தார்ப்பலத்தையும் போக்கும். கர்ப்பாசயத்திற்கும் வலுவைத்தரும். வெகு பிரயாஸத்துடன் பிரஸவிக்கும் ஸ்த்ரீகளுக்கு பாதையென்பது தெரியாமலே ஸுலபமாக பிரஸவிக்கச் செய்யு இது. ஸஞ்ஜீவி யெனத் தகுந்தது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

நாராயணீ பாகம்.—சரீரத்திற்குக் குளிர்ச்சியைத்தரும் மூப்பா. வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம்பெருகுவதை நிறுத்த மிகவும் சிறந்தது. சிறு குழந்தைகளுக்கும் பலத்தை யுண்டாக்கும்.

டின் 1-க்கு விலை ரூ. 1-8-0.

நேத்திரதாரா.—கண்வலி, கண்ணெரிச்சல், பிளிச்சைசார்வது, நீர்பெருகுவது, கண்ணில் பூவிழுதல் முதலியதைப் போக்கும்.

புட்டி 1-க்கு அணா 8.

ஸித்தகுல ஸஞ்ஜீவனி.—நாட்பட்ட அஜீர்ணம், சூலை, வாந்திகள். இவைகளைப்போக்கும். வல்துபக்கத்தில் காணும் கல்லீரல் வலிக்கு த்ரிசூலம் போன்றது. அஜீர்ணங்களையும் சூலைகளையும் நிவர்த்திசெய்து, இரத்தத்தையும் போஷிக்கச் செய்யும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

வாஸாரிஷ்டம்.—சளியுடன்கூடிய, அல்லது சளியில்லாத மேல் மூச்சை (உப்பஸம்) நசிப்பிக்கும். க்ஷயரோகம், மார்ச்சளி, மற்றும் சுவாஸப்பைகளுக்கு ஸம்பந்தித்த ஸகலரோகங்கள், இரத்தபித்தம் இவற்றைப் போக்குவதற்கு இரத்தினம் போன்றது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1.

லவணபாகம்.—இரத்தத்துடன்கூடிய மூலரோகத்தையும், முளைகளுடன்கூடிய மூலத்தையும் அத்புதமாய் அகற்றும்.

டின் 1-க்கு ரூ. 2.

ஸ்வர்ணவங்கம்.—இந்த்ரியநஷ்டம், ஸ்வப்னத்தில் இந்த்ரியம் நழுவுதல், வெளிப்படுதல் முதலியவற்றிற்கு ஸஞ்ஜீவி போன்



றது. மேலும் வெகு நாட்களாயிருக்கும் வெட்டையை வேருடன் நீக்கும்.

7 நாள் மருந்துக்கு ரூ. 4.

ஸ்வர்ணக்ரவ்யாதரஸம்.—நெடுநாட்களாயிருக்கும் அஜீர்ணவ்யாதிகளுக்கு நிகரில்லாத மருந்து. வயிற்றுப்பொருமலையும், புளித்த ஏப்பத்தையும் போக்கும்.

7 நாள் மருந்துக்கு ரூ. 4.

சுவாஸசிந்தாமணி.—மூச்சுவிட முடியாமல் திண்டுமிண்டாடும் படி வெகு கோரமான பாதையைத் தரும் சுவாஸகாஸரோகத்தில் இதன் புகையை முகர்ந்தவுடன், சூரியோதயத்தினால் பனிபோல் சுவாஸகாஸம் பறந்துபோம்.

புட்டி 1-க்கு விலை அணா 8.

விரணரோபணீ.—சொறி, சிரங்கு, அடி அல்லது நெருப்புப்பட்ட விரணங்கள் இவைகளை நிஸ்ஸம்சயமாய் நிர்மூலமாக்கும்.

டப்பி 1-க்கு விலை அணா 4.

வஸந்தகுஸுமாகரம்.— பலவகையான மூத்திர வியாதிகளுக்கும், மூத்திரத்திலிருக்கும் தித்திப்பு தோஷங்களுக்கும் ஆர்யவைத்திய சாஸ்திரத்தில் மிகவும் உத்தமமான மருந்தென்று வெகு பிரஸித்தமாய் சொல்லப்படுகிறது. மேலும் மதுமேஹம் வெகு மூத்திரம் இவைகளால் உண்டாகும் மேஹ விரணங்களையும் வரவொட்டாமற் செய்யும். மூத்திர குண்டிக்காய்களுக்கும், நரம்புகளுக்கும் வலுவைத் தருவதில் இதற்கொப்பானது வேறோர் ஔஷதம் இருப்பதாக எமக்குப் புலப்படவில்லை.

விலை தோலா 1-க்கு ரூ. 30; 7 நாள் மருந்துக்கு ரூ. 5-8-0.

சந்தன பலாலாக்ஷாதைலம்.— இத்தைலத்தை இரண்டொரு முறை அப்யஞ்ஜனம் செய்துகொண்டால், உப்பஸரோகம், க்ஷயம், வெகுநாட்பட்ட காய்ச்சல், பாண்டு, தலைவலி, சிரோவாதரோகங்கள், சரீரவேக்காடு முதலியவையனைத்தும் குணமாகும். மூளைக்குக் குளிர்ச்சியையும், வலுவையும் தரும்.

புட்டி 1-க்கு ரூ. 2.

ஆத்ரேயவடி.— மேஹ வாயுவினால் உண்டாகும் வலிகளுக்கு வஜ்ராயுதம போன்றது. கீல்வாயு, கீல்வீக்கம், வெகுநாட்கள்வரையில் விடாமலிருக்கும் நோவுகள் முதலியவைகளை யெல்லாம் போக்கிவிடும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

ஸாரஸ்வதகிருதம்.—உன்மாதம் (சித்தபிரமை) முதலியவற்றால் உண்டாகும் மூர்ச்சை முதலான விகாரங்கள் இவ்வௌஷதத்

...று கிரமமாய்ப் பிரயோகிப்பதால் கிரமமாய் விலகுகின்றன. ஞாபகக் குறைவை யடைந்தவர்கள் இதைப் பிரயோகிப்பாராகில் மூளையின் சக்தியையும், ஞாபகசக்தியையும் பலப்படுத்திக் கொள்வார்கள். மேலும் இது இரத்தத்தைச் சுத்தமாக்கி, சரீரகாந்தியை யதிகப்படுத்தும்.

சேர் 1-க்கு ரூ. 4.

ஹ்ருத்ரோகாந்தகிருதம்.—இருதயத்திற்கு பலத்தைக்கொடுத்து, அவ்வுறுப்புடைய பலமின்மையையும், வலியையும் நிவாரணம் செய்யும். இருதயரோகமனைத்திற்கும் மிகவும் உபயோகமான மருந்து. அவ்வித ரோகம் வருவதாகத் தெரிந்தால் அவர் இம்மருந்தை யுபயோகித்து அதை வரவொட்டாமல் செய்து கொள்ளக்கூடும். உங்களுடைய வியாதி தீராதென்று நிராசையுண்டாவதற்கு முன் இதை யுபயோகித்துப்பாருங்கள்.

சேர் 1-க்கு விலை ரூ. 3.

சிசுஸம்ரக்ஷிணி.—சிறுகுழந்தைகள் அலறி அழுதல், திடுக்கிடுதல், பயப்படுதல், பால் குடிக்காமலிருத்தல் இவற்றைப் போக்குவதில் ஒப்பில்லாதது.

புட்டி 1-க்கு அணா 8.

ஸர்தாக்னிகுமாரம்.—வெகுநாட்பட்ட ஜ்வரம், மேஹஜ்வரம், ப்லீஹம் அல்லது மண்ணீரலின் வீக்கத்துடன் கூடிய நெடுநாளாய்த் தொடரும் காய்ச்சல் இவைகளை அடியோடு அகற்றும்.

7 நாள் மருந்துக்கு ரூ. 3.

கண்டகூஷ்மாண்ட லேஹ்யம்.—(ஸ்த்ரீகள், புருஷர், சிறுகுழந்தைகள் இவர்களுக்குண்டாகும் காசங்களுக்கு ஸஞ்ஜீவி.) உலர்ந்துபோகும் சரீரஸ்வபாவமுடைய சிறுபிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் மாம்ஸத்தை செழிக்கச்செய்யும். க்ஷயம், உப்புஷம், இருமல் [illegible] இவைகளைப் போக்கும். ச்வாஸப்பைகளுக்கு மிகவும் [illegible]

டின் 1-க்கு ரூ. 2-8-0.

[illegible]காந்தவல்லப [illegible].—பாண்டு ரோகம், க்ஷயகாஸம், வெகுநாட்பட்ட ஜ்வரம், இரத்தமின்மையால் உண்டாகும் திமிர்ரோகம் இவற்றை நிவர்த்திப்படுத்தும். இரத்த விருத்திசெய்து நல்லவலுவைத் தரும்.

7 நாள் மருந்துக்கு ரூ. 3.

ஆயுர்வேதமார்த்தாண்ட பிஷக்மணி
பண்டித டி. கோபாலாசாரியர், எ.வி.எஸ்.,
ஆயுர்வேதாசிரமம்,
55, [illegible] தெரு,
[illegible]

85792

காலரா. (வாந்திபேதி) ப்ளேக். (மஹாமாரி)

இவற்றினின்றிருந்து பல்லாயிரம் ஜனங்கள்
காப்பாற்றப்பட்டனர்.

இதற்கு திருஷ்டாந்தம்.

இந்தியா, பர்மா, ஸிலோன், ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில்
எங்கும் எமது மருந்து நன்கு பரவியிருப்பதே.

ஒவ்வொரு வீட்டிலும் இம்மருந்துகள் இருக்கவேண்டியவை
யென்க்கூறவும் வேண்டுமோ?

காலராவுக்கு நிகரில்லா ஸஞ்ஜீவிகள்.

கர்ப்பூராத்யரிஷ்டம் }
விஷூசிஸஞ்ஜீவனி மாத்திரை } விலை அணா 12.

ஹைமாதிபானகம்.

ப்ளேக் ஜ்வரத்திற்கு வஜ்ராயுதம்.
மேலும் ப்ளேக் வரவிடாமல் அதைத்தகையவும் வல்லது.

பெரிய ஸீஸா விலை ரூ. 1. சிறிய ஸீஸா விலை அணா 10

சததௌதக்ருதம்.

ப்ளேக் கட்டிகளைத் தொலைக்கக்கூடிய வெகு உயர்ந்த களிம்பு.

பெரிய ஸீஸா விலை அணா 12. சிறிய ஸீஸா விலை அணா 8.

எமதிடம் சாஸ்த்ரீயமான எல்லா மருந்துகளும்
தயாராயிருக்கின்றன.